விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 22 திங்கட்கிழமை (08.10.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 294

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

# இந்தியாவின் உத்தரவாதத்துடன்

# அரசு-கூட்டமைப்பு விரைவில் பேச்சு

## டில்லி சென்ற கூட்டமைப்புடன் பேசப்படுமாம்

(கொழும்பு)

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இணைந்து கொள்ளும் என்ற உத்தரவாதத்தின் அடிப்படையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மீண்டும் இருதரப்புப் பேச்சுக்களை இலங்கை அரசாங்கம் ஆரம்பிக்கவுள்ளதாக கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. சமநேரத்தில் நாடாளும்ன்றத் தெரிவுக்குழுவில் இடம்பெறுவது என்ற இந்தியாவின் உறுதிப்பாட்டுடன் இந்தப் பேச்சுக்களை அரசாங்கம் ஆரம்பிக்கவுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் ஆராய்ந்த விடயங்கள் நவநீதம்பிள்ளையிடம் கையளிப்பு

### உறுதிப்படுத்தினார் ரவீனா சம்பசானி

(கொழும்பு)

இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக் குழுவின் பிரதிநிதிகள் தமது விஜயத்தின் போது ஆராய்ந்த விடயங்கள் குறித்து அறிக்கை ஒன்றை மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையிடம் கையளித்துள்ளனர்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தொடர்பாடல் துறை பிரதிநிதி ரவீனா சம்பசானி இந் தகவலை வெளியிட்டுள்ளார்.


இருந்தபோதும் மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை தமது இலங்கை விஜயம் குறித்து இதுவரையிலும், தீர்மானிக்கவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்திருந்த மூன்று பிரதிநிதிகளும் தமது விஜயம் குறித்து நவநீதம் (20ஆம் பக்கம் பார்க்க)

## இருபது-20 கிண்ணத்தை கைப்பற்றியது மே.தீவுகள்



# 13ஆவது அரசியல் திருத்தம் பிரச்சினைக்குத் தீர்வாகாது



## இரா. சம்பந்தன் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் படி கொண்டு வரப்பட்ட 13-வது சட்டத் திருத்தத்தை தமிழர் இனப்பிரச்சினைக்கான ஓர் அரசியல் தீர்வாக தாம் ஒரு போதும் ஏற்றுக் கொண்டதில்லை என்றும், ஐக்கிய இலங்கைக்குள் நடைமுறைச் சாத்தியமுள்ள ஒரு தீர்வையே தாம் நாடுவதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அரசியல் தீர்வுத் திட்டம் பற்றி பேசுவதற்காக (20ஆம் பக்கம் பார்க்க)

## நீதிபதிகள் இன்று பணிப்புறக்கணிப்பு

(கொழும்பு)

இலங்கையில் பிரதம நீதியரசர் முதற் கொண்டு நீதிச்சேவை அதிகாரிகளின் குடும்பங்களுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக நீதிச்சேவைகள் ஆணைக்குழு கடந்த மாதம் எச்சரித்திருந்தது.

இலங்கையில் நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ண மீதான தாக்குதலைக் கண்டித்து இன்று திங்கட்கிழமை நீதிமன்றக் கடமைகளை புறக்கணிக்கவுள்ளதாக நீதிபதிமார் அறிவித்துள்ளனர். (20ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திரத்திற்கான பெண்கள் அமைப்பின் தலைவியின் வாகனம் மீது கழிவு ஒயில் வீச்சு

### நல்லூர் ஆலயச் சூழலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

முன்னிலை சோசலிஷ கட்சியின் சுதந்திரத்திற்கான பெண்கள் அமைப்பின் தலைவி திமித்து ஆட்டிகல உள்ளிட்ட குழுவினர் பயணித்த வாகனம் மீது யாழில் கழிவொயில் வீசப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்றுள்ளது. நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு பின்புறமாக உள்ள வீதியில் வைத்து (02ஆம் பக்கம் பார்க்க)



## இலங்கையும் இந்தியாவும் இணைந்து எஞ்சிய புலிகளை ஒழிக்க வேண்டும்!

### முன்னாள் வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

எஞ்சியுள்ள விடுதலைப்புலிகளின் செயற்பாடுகளை இல்லாதொழிப்பதற்கு இந்தியாவும் இலங்கையும் இணைந்து செயற்பட வேண்டும் என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரோகித போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

தென்னிந்தியாவில் புலிகள் மீள ஒருங்கிணைய முயற்சித்து வருவதாகவும், மாவோ தீவிரவாதிகளுடன் தொடர்பு பேணி வருவதாகவும் இந்தியத் தகவல்கள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (20ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## மரண அறிவித்தல்

# நடராசா பாலகணேசன்

(முன்னாள் களஞ்சியப் பொறுப்பாளர் – தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்)



மகாதனை தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் றொட்டியாலடி உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா பாலகணேசன் நேற்று (07.10.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா-மீனாட்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், பத்மதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இராசா மற்றும் புவனேஸ்வரியின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பகவதி, பூரணம் (ஓய்வு பெற்ற நெசவு ஆசிரியர்), பரமேஸ்வரி, செல்வநாயகம் (ஓய்வூதியர் மக்கள் வங்கி), சிவபாலகணேசன் (ஓய்வூதியர் தேசிய சேமிப்பு வங்கி), மங்கையற்கரசி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற முதலித்தம்பி, கந்தசாமி, காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் யுவதி, பரமேஸ்வரி, மற்றும் புவனராஜா, புஸ்பராஜா, புவனதயாபரன் ஆகியோரின் மைத்துனரும், நடராஜவோத்மன் (தேசிய சேமிப்பு வங்கி - யாழ்ப்பாணம்), அருள்பாலமேனன் (தேசிய சேமிப்பு வங்கி - மானிப்பாய்) ஆகியோரின் அன்புத் தந்தையும் வனிதா (மேல் நீதிமன்றம் யாழ்.), ஜெயதாரணி (தேசிய சேமிப்பு வங்கி - யாழ்ப்பாணம் 2ம் கிளை) ஆகியோரின் அன்பு மாமனும் சகானா, லிசானா, அபினேஷ், ஷாருகேஷ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (08.10.2012) திங்கட்கிழமை மாலை 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

றொட்டியாலடி,
உடுவில்,
சுன்னாகம்.

தகவல்: குடும்பத்தினர்

(599)



## யா/விக்ரோறியாக்கல்லூரி

## இனிய வாழ்த்துக்கள்

எமது கல்லூரியின் ஆசிரியர்

### திரு. நாராயணபிள்ளை திருக்குமரன்



அவர்கள் 02.10.2012 அன்று ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற வைபவத்தில் அதிபர் சேவை 3 இற்கு பதவி உயர்த்தப்பட்டமையை வாழ்த்துவதோடு மேலும் பல பதவி உயர்வுகள் பெற்று சிறப்புற்று வாழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்.

(583)



Great Opportunity to Learn advanced Spoken English From a Panel of highly Qualified, Experienced and Native Level Lecturers

## BUSINESS COMMUNICATION & SPOKEN ENGLISH

Workroom based practical English in a fully-fledged English environment

TARGET GROUPS

Officers, Graduates & Undergraduates, Job Seekers, School Leavers and Others



Duration :- 72 Hrs
Flexible Time

Registration now Open

HotLine:- 0777 444 225

One Campus for English Plus..........

IISEEES NALLUR CAMPUS
Your path finder

762, Point Petro Road, Nallur, Jaffna

Tel : 021 2224728, Email: info@iiseees.lk


## நாவலர் குருபூசை தினத்தை முன்னிட்டு

# பாடசாலை மாணவர்களிடையே பேச்சு, கட்டுரைப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் குருபூசைத் தினத்தினை முன்னிட்டு பேச்சு, கட்டுரைப் போட்டிகளை பாடசாலை மாணவர்களிடையே நடத்த திட்டமிட்டுள்ளது.

பேச்சுப் போட்டிகள் எதிர்வரும் நவம்பர் 18ஆம் திகதி ஞாயிற்றுக் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 3 பிரிவுகளாக நடைபெறும்.

தரம் 6,7,8 மாணவர்கள் (கீழ்ப் பிரிவு) நாவலர் சைவக் காவலர் எனும் தலைப்பில் 5 நிமிடமும், தரம் 9,10,11 (மத்திய பிரிவு) நாவலரின் சமூகப்பணி எனும் தலைப்பில் 7 நிமிடமும், தரம் 12,13 (மேற்பிரிவு) நாவலரின் பன்முகப்பணி எனும் தலைப்பில் 10 நிமிடமும் பேச்சுப் போட்டி நடைபெறும்.

கட்டுரைப் போட்டியானது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின் வாழ்க்கை வரலாற்றுடன் தொடர்புள்ள தலையங்கம் போட்டி நாளன்று வழங்கப்படும்.

கட்டுரைப் போட்டி தரம் 12,13 மாணவர்களுக்கானதும் ஒரு மணித்தியாலத்தைக் கொண்டதாகவும் இருக்கும்.

இப்போட்டி எதிர்வரும் நவம்பர் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கழமை முற்பகல் 10 மணி தொடக்கம் 11 மணி வரை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்குறிப்பிட்ட பிரிவுகளில் முன்பு பங்குபற்றி பரிசு பெற்றவர்கள் இவ்வருடம் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். ஒரு பிரிவுக்கு ஒரு பாடசாலையில் இருந்து ஒரு மாணவர் மட்டுமே தோற்றமுடியும்.

இப்போட்டிக்கான விண்ணப்பப் படிவங்களை யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை காரியாலத்தில் எதிர்வரும் 31 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் இல.66, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு நேரடியாகவோ, தபாலிலோ அனுப்பி வைக்க முடியுமென சபைச் செயலாளர் தி. மாணிக்கவாசகர் அறிவித்துள்ளார்.

இப்போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான பசிரில்கள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் 133 ஆவது குருபூசைத் தினமாகிய எதிர்வரும் டிசம்பர் மாதம் 5 ஆம் திகதி புதன்கிழமை வழங்கப்படும். (எ-9)

# நாடாளுமன்ற தெரிவுக்குழு விடயத்தில் எதிர்க்கட்சிகளின் நிலைப்பாடு தவறு

## அமைச்சர் வாசு சுட்டிக்காட்டு

பாராளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பில் எதிர்க்கட்சிகள் பின்பற்றி வரும் நிலைப்பாடானது தீர்வுத் திட்ட முனைப்புக்களில் பாரிய பின்னடைவை ஏற்படுத்தும் என தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயகார தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி,தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பி. ஆகிய கட்சிகள் பாராளுமன்றத தெரிவுக்குழுவில் பங்குகேற்காமை பிழையானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி,தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பி. ஆகியன இதனை விடவும் சாதகமான அணுகுமுறைகளை பின்பற்ற வேண்டும். பாராளுமன்றத் தெரிவுக் குழுவினை பலவீனப்படுத்தும் வகையில் செயற்படக்கூடாது.

பாராளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பில் நம்பிக்கை இல்லை எனத் தெரிவிக்கும் இந்தக் கட்சிகளுக்கு வேறு மாற்று வழிகளும் கிடையாது.

அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும் இடையில் நடத்தப்படும் பேச்சுவார்த்தைகளின் மூலம் மட்டுமே தேசிய இனப் பிரச்சினைக்கு காத்திரமான இறுதித் தீர்வுத் திட்டத்தை எட்ட முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசியப் பிரச்சினை தொடர்பில் ஆளும் கட்சிகளும் எதிர்க்கட்சிகளும் இணைந்தே தீர்வுத் திட்டங் களை எட்ட முடியும் என அவர் குறிப்பிட் டுள்ளார்.

தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் தமது அமைச்சு மொழிக் கொள்கைகளை அமுல்படுத்தி வருவதாக அமைச்சர் வாசுதேவ நாணயக் கார தெரிவித்துள்ளார். (எ-8)

# சுதந்திரத்திற்கான...

இந்தக் கழிவொயிலை இனம் தெரியாத நபர்கள் இருவர் மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்து வீசி விட்டுச் சென்றுள்ளனர். இது தொடர்பாக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் மாவை கலட்டியில் இடம்பெற்ற சிறுவர் தின நிகழ்வில் கலந்து கொள்வதற்காக குறித்த அமைப்பினர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தனர்.

இந்த நிகழ்வில் தாம் கலந்து கொண்டிருந்த போது அரசாங்கம் சார்பான பிரதேசசபை உறுப்பினர் ஒருவர் தம்மை அணுகி இங்கு உங்களுடைய உதவிகள் எதுவும் தேவையில்லை எனக் கூறியிருந்தார் எனவும் தமது அரசியல் செயற்பாடுகளை மட்டுப்படுத்தவே இந்தத் தாக்குதல் சம்பவம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். தமது வாகனத்தின் மீதான தாக்குதலுக்கு பாதுகாப்புடன் தொடர்புடையவர்கள் சம்பந்தப்பட்டுள்ளனர் எனவும் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (எ-6)

# இலவச பாடப் புத்தகங்களை இன்று பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்டத்திற்குட்பட்ட சகல பாடசாலைகளும் தமக்கான இலவசப் பாடப் புத்தகங்களை இன்று நல்லூர்க் கோட்டக் கல்வி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு நல்லூர் கோட்டக் கல்விப் பணிபாளர் எஸ். மாணிக்கராஜா அறிவித்துள்ளார்.

களஞ்சிய வசதியீனங்கள் இருப்பதால் இன்றைய தினமே அதிபர்கள் தமக்குரிய இலவசப் பாடப் புத்தகங்களை எடுத்துச் செல்லுமாறும் அவர் தெரிவித்துள்ளார். (ந)

# கிணற்றிலிருந்து முதியவரின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். திருநெல்வேலி சிவன் வீதிப் பகுதியில் உள்ள வீட்டுக் கிணற்றிலிருந்து முதியரொருவரின் சடலம் நேற்று மாலை 6 மணியளவில் மீட்கப்பட்டுள்ளது.

அதேயிடத்தில் வசித்து வந்த கந்தையா சபாநடேசன் (வயது 63) என்ற வயோதிபரே உயிரிழந்தவராவார்.

இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தற்செயலாக இடம்பெற்ற விபத்தாக இருக்கலாம் என விசாரணைகளை மேற்கொண்டுள்ள கோப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-8,6)


மின்சாரம் தடைப்படுவதால் ஏற்படும் நட்டத்தை இல்லாதொழிக்க...
4050 க்கும் மேற்பட்ட மின்பிறப்பாக்கிகள் இலங்கையில் பயன்பாட்டிலுள்ளன

MACK POWER

கிர்லோஸ்கார் மின்சார பிறப்பாக்கி



☼ குறைந்தபட்ச செலவு
☼ இலகுவாக பராமரித்தல்
☼ விருப்பத்திற்கு ஏற்ப AMF/AD வசதிகள்

ரூபா 595,000 முதல்....

உடன் அழையுங்கள் 071-4269470 077-7563453

☼ சிறந்த முகாமைத்துவ தொகுதிக்காக ISO 9001 சான்றிதழ்
☼ சுற்றாடல் முகாமைத்துவ தொகுதிக்காக ISO 14001 சான்றிதழ்
☼ US Tire 1/11 நியமத்தின் பிரகாரம் வெளியேற்றல்

மெக்ஸ்வுட்ஸ் எனர்ஜி பீஎல்சீ
10,ஞானார்த்த பிரதீப மாவத்தை, கொழும்பு-08
தொலைபேசி: 011-2691186, தொலைநகல்: 011-2699454
இணையம்: me@mackwoods.com
மின்னஞ்சல்: www.mackwoods.com

(இ/1071)



"அன்பே சிவம். ஒன்றே குலம். ஒருவனே தேவன்."

ஸ்ரீவித்தியா குருகுலம்

வழங்கும், ஆசிரியர் முத்துலிங்கத்தின்

'EASY ENGLISH'

✱ உத்தியோகத்தர்க்கு ✱ ஆசிரியர்க்கு ✱ உயர்கல்வி மாணவர்க்கு
✱ A/L படித்தவர்க்கு ✱ மகளிர்க்கு ✱ வெளிநாடு செல்பவர்க்கு

குருகுல மரபு : இலவசக் கல்வி

விபரங்கள் + பெயர்பதிவு 773212711 மூலம்



செல்லா சினிமா- யாழ்ப்பாணம்



விஜய் இயக்கத்தில் சியான் விக்ரம், அனுஷ்கா, எமி ஜக்சன், சந்தானம் மற்றும் பலர் நடிப்பில்

தாண்டவம்

D.T.S

10.30, 2.30, 6.30, 9.30


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## விருந்தினருக்கு வேண்டிய குறிப்புகள்

ஒருவர் அவசர அவசரமாக வீட்டைப் பூட்டிவிட்டு வெளியே செல்வதற்கு ஆயத்தமானார்.

இதைப் பார்த்த இன்னொருவர் ''என்ன விடயம்?'' என்று விசாரித்தார்.

''சொந்தக்காரர் ஒருவர் ஊரில் இருந்து இன்றைய தினம் வருவதாக கடிதம் அனுப்பி வைத்திருந்தார்... அதுதான்...'' என்று இழுத்தார் இவர்.

''புகையிரத நிலையத்திற்கு போய் எதிர்கொண்டு அழைத்துக் கொண்டு வரப்போகிறீர்களா?'' என்று கேட்டார் அவர்.

''அதெல்லாம் ஒன்றுமில்லை சேர்! அந்த விருந்தாளி வருவதற்கு முன்னதாக நான் எங்கேயாவது தலைமறைவாக போய்விட வேண்டும்'' அதனால்தான் அவசரமாக செல்ல வேண்டியுள்ளது'' என்று கூறினார்.

''விருந்தினர்கள் வருகிறார்கள்'' என்றாலே வீட்டிலே இருக்கிறவர்கள் வெளியிலே புறப்பட்டால் நல்லது''– என்று நினைக்கிற காலம் இது. சொந்தக்காரர்கள் மேலே உள்ள வெறுப்புத்தான் இதற்குக் காரணம் என்று கூறி விட முடியாது.

பரபரப்பான வாழ்க்கைச் செலவு, கடுமையான விலை வாசி உயர்வு (தற்போதைய பொருட்கள் விற்கும் விலை) வீட்டிலே இடவசதி பற்றாக்குறை,– இவை அனைத்தும் தான் இதற்குக் காரணமாகும்.

அதனாலே... இப்போது ஒரு வீட்டுக்கு விருந்தினராக நீங்கள் போக வேண்டுமென்று அபிப்பிராயம் இருந்தால்... அது பற்றிய சில நுணுக்கமான குறிப்புகளை இங்கே தருகிறோம். அறிந்து வைத்துக் கொள்ளுங்கள்.

பலபேரின் அனுபவத்தில் இருந்து சேகரித்த தகவல்கள் இவை. ஒரு நல்ல விருந்தினராக நடந்து கொள்வது எப்படி? விருந்தினரை உபசரிப்பது எப்படி?

நீங்கள் யாருடைய வீட்டிற்கு போகும் முன்னர் ஒரு தொலைபேசி அழைப்பு அல்லது கடிதம் ஒன்றை செய்து கொள்ளுங்கள்.

எத்தனை விருந்தாளிகள் போகப் போகிறீர்கள்– எவ்வளவு நாட்கள் தங்கி நிற்கப் போகிறீர்கள். அனைத்தையும் அதில் அறிவுறுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் தங்கப் போகும் உறவினர் வீட்டுக்கு உங்கள் நண்பர்கள் எவரையும் கூடவே அழைத்துச் செல்ல வேண்டாம். ஏனெனில் நீங்களே ''ஓசி!'' அதிலேயும் இவர்கள் வேறாக அழைத்து செல்வது என்பது...

உங்கள் வீட்டிற்கு இவ்வளவு நாட்கள் வந்து தங்கவுள்ளேன்– வரலாமா?'' என்று கேளுங்கள். பெரும்பாலும் உங்கள் பக்கமே ஆதரவான பதில் வரும்.

''நீங்கள் வரும் சமயத்திலே நான் அலுவலகத்துக்கு வேலையாக அல்லது வெளியூர் செல்ல வேண்டியிருக்கும்'' என்று பதில் வந்தால் நீங்கள் உங்களது பயணத்தை நிறுத்திக் கொள்ளுங்கள். ''வர வேண்டாம்'' என்று பதில் கிடைத்தால் அந்த வீட்டுப்பக்கம் தலை வைத்து படுக்க வேண்டாம்– அதுதான் மரியாதை.

''உங்களின் வருகையை எதிர்பார்த்திருக்கிறோம்'' என்று பதில் வந்தால்– அடுத்த கணம் எதில் பயணிக்கிறீர்கள் என்பதை எழுதி அனுப்பி வைத்து விடுங்கள்.

நீங்கள் போகும்போது வெறுங்கையோடு போக வேண்டாம். உங்களின் ஊரிலே என்ன விசேடமாக அந்தக் காலப்பகுதியில் கிடைக்கிறதோ அதாவது பழங்கள், இனிப்புப் பண்டங்கள் அதை வாங்கிக் கொண்டு அவர்களது வீட்டிற்குச் செல்லுங்கள்.

உங்களுக்கு வேண்டிய சோப், சீப்பு, துவட்டி, உடை, வேறு தேவையான அனைத்தையும் எடுத்துக் கொண்டு போய் விடுங்கள். அங்கே போய் அது இருக்கிறதா, இது இறக்கிறதா என்று கேள்விக் கணைகளைத் தொடுக்காதீர்கள்.

போகும் இடத்திலே சுமுகமாகப் பழகிக் கொள்ளுங்கள். அவர்களுக்குத் தகுந்த மாதிரி நடந்து கொள்ளுங்கள். அவர்கள் சாப்பிடும் போது நீங்களும் சேர்ந்து உணவருந்துங்கள். அவர்கள் தூங்கும் போது நீங்கள் தூங்கச் செல்லுங்கள். வீட்டார் அனைவரும் தூங்கிய பின்னர் நீங்கள் மட்டும் எழுந்து ''எனக்கு சாப்பாடு வேண்டும்'' எனக் கேட்டால் சரியா.

உங்கள் உடைகளை நீங்களே நீரில் அலசி எடுத்துக் கொள்ளுங்கள். அவர்களின் வீட்டு வேலையாளிடம் கொடுக்காதீர்கள். நீங்கள் சாப்பிட்ட உணவு தொடர்பாக எதுவித குறையும் சொல்லாதீர்கள்.

விருந்தாளியாக ஒரு வீட்டுக்குப் போய் இருக்கும் போது அந்த வீட்டிலே கடன் கேட்டுக்கொண்டு நிற்காதீர்கள். அது உங்களின் உறவுக்கு நல்லதல்ல.

இப்படி சில நுணுக்கமான விடயங்களை கவனத்திலே வைத்துக் கொண்டால் உங்களுக்கு நல்லது. அவர்களுக்கும் நல்லது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# திருநெல்வேலி காணி அபகரிப்பு நீதிமன்றில் முறையிடப்படும்

## நல்லூர் பிரதேச சபை தவிசாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலியில் நல்லூர் பிரதேச சபைக்கு சொந்தமான காணியை இராணுவம் அடாத்தாக கையகப்படுத்த முயற்சிப்பதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் இராணுவத்திற்கு எதிராக நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்போவதாகவும் நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் ப. வசந்தகுமார் தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலி பாற்பண்ணைக்கு முன்பாக உள்ள நல்லூர் பிரதேச சபைக்கு சொந்தமான 5.5 பரப்புக் காணியை இராணுவம் தன்னுடைய காணி என நீண்டகாலமாக சொந்தம் கொண்டாடி வந்துள்ளது.

குறித்த காணியின் தற்போதைய பெறுமதி சுமார் 72 இலட்சம் வரும் எனவும் சபைத் தவிசாளர் தெரிவித்தார். காணியை சிறுவர் பூங்கா அமைப்பதற்காக ஒதுக்கியுள்ளதாகவும் இதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இருப்பினும் இராணுவத்தினர் குறித்த காணியை கையகப்படுத்தி அதிக பாரிய படை முகாம் அமைக்க முன் முயற்சி எடுத்து வருகின்றனர்.

மக்கள் அதிகமாக வாழும் பகுதியில் இராணுவ முகாம் அமைக்கப்படுவது ஏற்கக்கூடிய விடயம் அல்ல. அத்தோடு காணியை சுவீகரிப்பதற்காக இராணுவத்தினரையும் குவித்துள்ளனர். இதனால் மக்கள் அச்சத்தில் உள்ளனர்.

இராணுவத்தினரின் இத்தகைய அடாவடித்தனத்தை பிரதேசசபை வன்மையாகக் கண்டிப்பதோடு எதிர்காலத்தில் மக்களைத் திரட்டிப்போராட்டங்களை முன்னெடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த காணியை இராணுவத்தினர் அடாத்தாக கையகப்படுத்த முற்படுவதாக பிரதேச சபையினர் த.தே. கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்தினர்.

மேலும் குறித்த காணியை இராணுவத்தினர் கையகப் படுத்துவதற்கான பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைக்கப்பெறவில்லை எனவும் பாராளுமன்ற உறுப்பினருடனான சந்திப்பின்போது இராணுவ உயரதிகாரிகள் தெரிவித்தனர். இருப்பினும் குறித்த காணியைச் சுற்றி இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர். அதனால் அப்பகுதி மக்கள் அச்சத்தில் உறைந்துள்ளனர். (அ–6)

# பரிசளிப்புவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய முதல்வர் திருமதி லலிதாமலர் முகுந்தன் தலைமையில் பாடசாலை பிரதான மண்பத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன், சிறப்பு விருந்தினர்களாக கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தன் ஓய்வுநிலை அதிபர் ச.ஞானலிங்கம், உலக தரிசன திட்ட அதிகாரி ஜெ.சர்வரமணன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ–6)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 100 | 30-40 | 70 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 55 | 60 | 40 | 60 |
| தக்காளி | 70 | 30 | 25-30 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 30 | 30 | 40 |
| கோவா | 100 | 80 | 60 | 70 |
| கரட் | 100 | 100 | 80 | 130 |
| பூசணி | 60 | 30 | 35 | 50 |
| புடோல் | 50 | 40 | 40 | 60 |
| வாழைக்காய் | 50 | 30 | 25-30 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 60 | 50 | 75 |
| பெரிய வெங்காயம் | 100 | 50 | 60 | 60 |
| பாகற்காய் | 120 | 80 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 40 | 30 | 40 |
| கருணைக் கிழங்கு | 70 | 60 | 45 | 75 |
| பயற்றங்காய் | 80 | 50 | 40 | 90 |
| லீக்ஸ் | 100 | 120 | 70 | 100 |
| பீற்றூட் | 70 | 60 | 50 | 60 |
| கறிமிளகாய் | 80 | 80 | 70 | 100 |
| முருங்கைக்காய் | 70 | 60 | 40 | 40 |
| போஞ்சி | 60 | 110 | 80 | 140 |
| கத்தரிதம்புள்ள | 60 | 70 | -- | 50 |
| கீரை – 1 பிடி | 15 | 30 | 20 | 20 |
| தேசிக்காய் | 300 | 280 | 250-300 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30 | 30-35 | 28-30 |

# இராசி பலன்

*08.10.2012*
*(புரட்டாதி 22, திங்கட்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு*
*அட்டமி முன்னிரவு 10.25 மணிவரை*
*திருவாதிரை முற்பகல் 8.14 மணிவரை*
*இராகுகாலம் 7.32-9.02 மணிவரை*
*சுபநேரம் 12.02-1.32 மணிவரை*
*மத்தியஷ்டமி.*

**மேடம்** வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காணும் நாள், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், உறவினர் வழியில் உதவிகள் கிடைக்கலாம்.

**இடபம்** கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், புதிய முயற்சியொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், உங்கள் கருத்துக்கு மதிப்பு கிடைக்கும்.

**மிதுனம்** நண்பர்கள் சிலருடன் சேர்ந்து வெளியிடங்களுக்கு செல்லும் வாய்ப்புண்டு, எப்படி நடக்குமோ என நினைத்த காரியம் நல்லபடியாக நடபெறலாம்.

**கடகம்** அன்றாட பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள், அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், பயணத்தால் பலன் கிடைக்கும் நாள்.

**சிங்கம்** தொலைபேசி வழியில் சந்தோசம் தரும் செய்திகளைக் கேட்கலாம், அந்நியதேசப் பயண வாய்ப்புகள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**கன்னி** திறமைகள் வெளிப்படும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை இன்று செய்து முடிப்பீர்கள், தன்னம்பிக்கை அதிகரிக்கும், புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**துலாம்** விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும் நாள், விட்டுப் போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** குடும்பத்தில் கோபமாகப் பேசி விட்டு பின்னர் வருத்தமடைய நேரிடலாம், மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**தனுசு** குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், எதிர்பார்த்த தகவல்கள் வந்து சேரலாம், ஆனந்தமான நாள்.

**மகரம்** நாவன்மையால் நல்ல பெயரெடுக்கும் நாள், தொழில் வளர்ச்சிக்கு பெண் வழி ஒத்துழைப்புகள் கிடைக்கும், கடன் பிரச்சினையைத் தீர்க்க முழு மூச்சுடன் செயற்படுவீர்கள்.

**கும்பம்** பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமைப்படுவீர்கள், புதிய முதலீடுகள் செய்வது பற்றி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், வியாபார விருத்தியுண்டு.

**மீனம்** மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பேச்சில் கனிவு பிறக்கும், வருமானம் திருப்தி தரும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் இவ் வருடம் குறைவடையும்



இவ்வருடத்தின் பொருளாதார வளர்ச்சி வீதம் 6.7 வீதத்தில் இருந்து 7.2 வீதத்திற்குள் அமையும் என திறைசேரியின் செயலாளர் கலாநிதி பி.பி.ஜெயசுந்தர அண்மையில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக கடந்த சில மாதங்களாக நிலவிய வரட்சி மற்றும் அதனால் ஏற்பட்ட பாதிப்புக்களே பொருளாதார வளர்ச்சி குறைவடைந்தற்கான காரணங்களாக அமையும் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இவ் வருடம் எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார வளர்ச்சியும் மொத்த தேசிய உற்பத்தியும் குறைவடையும் என்றே பொருளாதார நிபுணர்கள் மற்றும் வல்லுநர்களினால் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

குறிப்பாக இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் இது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோது, நாட்டின் 2012 ஆம் ஆண்டிற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி வீதம் 6.8 வீதமாக அமையும் எனக் குறிப்பிட்டிருந்தார்.

இவ் வருடத்திற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி வீதம் 7.2 சதவீதமாக அமையும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையிலேயே, தற்போது 6.8 சதவீதமாக மொத்த உள்நாட்டு உற்பத்தி வீதம் அமையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரட்சியானது விவசாயத்துறையைப் பாதித்துள்ளதுடன், மின்சார உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளது என மத்திய வங்கி ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.

அதாவது உற்பத்தி மற்றும் சேவைத்துறையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியே பொருளாதார வளர்ச்சி குறைவடைவதற்கும் மொத்த தேசிய உற்பத்தி குறைவடைவதற்கும் காரணமாக அமைந்துள்ளது.

கடந்த வருடம் பொருளாதார வளர்ச்சி வீதமானது 8.3 வீதமாகக் காணப்பட்டது.

யுத்தத்திற்கு பின்பான காலகட்டத்தில் இது மிகப் பெரிய அடைவு மட்டமாக இருந்தது.

வீதிக் கட்டமைப்பு விஸ்தரிப்பு, விவசாய உற்பத்திகள் அதிகரித்தமை என்பவற்றை பிரதான காரணங்களாகக் குறிப்பிடலாம்.

வரட்சி காரணமாக சக்தி வளம் கடுமையாக குறைவடைந்தது. இது நேரடியாகவே தொழிற்சாலை உற்பத்தி நடவடிக்கையை பாதித்தது.

அதாவது மின்சார உற்பத்தி வீழ்ச்சி காரணமாக நாட்டின் மின் துண்டிப்பு அமுல்படுத்தப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறு இருக்க, கடந்த காலத்தில் பங்குச் சந்தை செயற்பாடுகளும் சரிவைச் சந்தித்தன. இதுவும் பொருளாதார வளர்ச்சியில் தாக்கத்தை செலுத்தியது.

அதேவேளை, கடந்த காலங்களில் டொலருக்கு எதிரான ரூபாயின் பெறுமதி வீழ்ச்சி கண்டது.

இது பொருளாதாரத்தில் தாக்கம் செலுத்தும் முக்கிய காரணமாக அமைந்தது.

இதனால் இறக்குமதி பொருட்களின் விலைகள் அதிகரித்தன.

இதேபோன்று பல்வேறு காரணிகள் பொருளாதார வளர்ச்சி வீதம் குறைவடையக் காரணமாக அமைந்துள்ளன.




# ஜனசக்தி மற்றும் இலங்கை வர்த்தக சபையுடன் இணைந்து தொழில்முயற்சியாண்மைக்கு ஆதரவு

இலங்கையின் மிகப் பெரிய காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான ஜனசக்தி, இலங்கை வர்த்தக சபையுடன் (FCCISL) இணைந்து எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள Sri Lankan Entrepreneur of the Year 2012 நிகழ்வில், உள்நாட்டு தொழில் முயற்சியாண்மைக்கு ஆதரவினையும் வெகுமதிகளையும் வழங்கவுள்ளது.

இவ் உயர் தேசிய விருதின் மூலம் உள்நாட்டு வியாபார சமூகம் தங்களது முயற்சியாண்மை மனப்பாங்குகளை வெளிப்படுத்தவும், பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பினை செலுத்தவும் முடியும்.

இந்நிகழ்வின் தங்க அனுசரணையாளர் என்ற ரீதியில், ஜனசக்தி நிறுவனமானது இலங்கை வர்த்தக சபையுடன் இணைந்து தொழில் முயற்சியாளர்களின் சாதனைகளுக்கு அங்கீகாரம் வழங்கவுள்ளது.

# இந்திய காப்புறுதித் துறையில் அந்நிய முதலீடு 49வீதமாக உயர்வு

இந்திய காப்புறுதித்துறையில் அந்நிய நேரடி முதலீடு வரம்பை 49 சதவீதமாக உயர்த்த, இந்திய மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

மேலும் ஓய்வூதியத் திட்டத்தில் 26 சதவீத அந்நிய நேரடி முதலீட்டுக்கும் அனுமதி அளிக்கப்பட்டது.

நிதிப் பற்றாக்குறை, பணவீக்கம் போன்றவற்றால் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்பட்டது.

இதன் காரணமாக, வெளிநாடுகளில் இருந்து முதலீடு குறையத் தொடங்கியது.

இதனால் அமெரிக்க டொலருக்கு இணையாக இந்தியாவின் ரூபாய் மதிப்பு குறைந்தது.

இதன் காரணமாக கடும் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டு சில அதிரடி நடவடிக்கைகளை இந்திய மத்திய அரசு எடுத்தது.

அதில் ஒன்றுதான், சில்லறை வர்த்தகத்தில் அந்நிய தேரடி முதலீட்டை அனுமதிக்கும் முடிபு.

இதையடுத்து தற்போது காப்புறுதித் துறையில் அந்நிய நேரடி முதலீடு 26 சதவீதமாக உள்ளது.

இதை 49 சதவீதமான உயர்த்துவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் காப்புறுதித் துறையில் ஈடுபட்டுள்ள தனியார் நிறுவனங்கள் பயன்பெற முடியும்.

இதேவேளை, கோவை, திருச்சி, லக்னோ, வாரணாசி, மங்களூர் ஆகிய நகரங்களில் உள்ள விமான நிலையங்கள் சர்வதேச அந்தஸ்துக்கு உயர்த்தப்படவும் இந்திய அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 5971.99 | 5879.69 ⇩ |
| மிலங்கா விலைச்சுட்டி | 5645.95 | 5466.50 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3240.98 | 3170.14 ⇩ |

விலை அசைவுகளின் அடிப்படையில் புரள்வு (ரூபா.மில்.) 5,965.93

உயர்வடைந்த பங்குகள்(ரூ): பிமுத் பினான்ஸ்(34.40),சிஜரி(144.00),குட்ஹோப்(1390.00),எல்ஓஎல்சி(57.10),எல்பி பினான்ஸ்(169.80).

சரிவைக் கண்டிய பங்குகள்(ரூ): எஸ்.எம்.பி.லீசிங்(X)(0.40), பரஹறன்(1150.00), ஜிஎஸ்பினான்ஸ்(802.00),இன்பிராசக்சர்(147.90),செமாநெக்ஸ்(87.30)

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# லிப்டன் மூலம் புதிய தேயிலை ரகங்கள் அறிமுகம்

உலகின் முதற்தர தேயிலை வர்த்தக நாமமான லிப்டன், தனது உற்பத்தி தொகுதியில் புதிய சுவை சேர்க்கப்பட்ட தேயிலை ரகத்தை அறிமுகப்படுத்தி இலங்கையில் புதிய மைல்கல்லை நிலைநாட்டியுள்ளது.

மேலும் புதிய பொதியிடலுடன் கூடிய புதிய பச்சைத் தேயிலை ரகத்தைச் சேர்ந்த மின்ட், சிட்ரஸ் மற்றும் ஜாஸ்மின் , பியோர் போன்ற தேயிலை ரகங்களும் அறிமுகப் படுத்தப்பட்டிருந்தன.

லிப்டன் தேயிலையின் விசேடத்துவம், 1890ஆம் ஆண்டு முதல் ஆரம்பமாகி சுமார் ஒரு நூற்றாண்டு காலத்துக்கும் மேலாக புகழ் பெற்ற வர்த்தக நாமமாக திகழ்ந்து வருவதுடன் தற்போது உட்புகுத்தப்படும் நவீனமயமாக்கலின் மூலம் புதிய தயாரிப்புகளையும் வாடிக்கையாளர்களுக்காக வழங்கி வருகிறது.

1971ஆம் ஆண்டு யுனிலீவர் நிறுவனத்தின் மூலம் சர்வதேச ரீதியில் லிப்டன் வர்த்தக நாமமானது கையகப்படுத்தப்பட்டதன் பின்னர், உலகின் மிகப் பெரிய தேயிலை நாமமாக உருவாகியுள்ளது.

# கொகோ கோலா சிறிலங்கா முகாமையாளராக கபில நியமனம்



முன்னதாக கபில, யுனிலீவர் சிறிலங்காவில் நிதி முகாமையாளர், செயற்பாட்டு முகாமையாளர், உற்பத்திநிலைய முகாமையாளர் ஆகிய பதவிகளையும் வகித்துள்ளார்.

கொக்கோ கோலா பெவரேஜ் சிறிலங்கா லிமிடட், 2012 ஒக்ரோபர் 1-ம் திகதி முதல் செயற்பாட்டுக்கு வரும் வகையில், இலங்கைக்கான தமது தேச முகாமையாளராக கபில வெல்மில்லகேயை நியமித்துள்ளமை குறித்து அறிவித்துள்ளது.

தேச முகாமையாளராக நியமிக்கப்படுவதற்கு முன்னதாக கபில, நாட்டின் விநியோகச் சங்கிலியை தலைமையேற்று நடத்தினார்.

அத்துடன் அதேகாலப் பகுதியில் மனிதவள முகாமையாளராகவும் செயற்பட்டார்.

கொக்கோ கோலா சிறிலங்காவுடன் இணைந்து கொள்வதற்கு

# சுற்றுலா அ/தி அதிகார சபை தலைவராக பாஷ்வர சேனக குணரத்தன நியமனம்

2010-ம் ஆண்டு தொடக்கம் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அங்கத்தவராக கடமையாற்றிவரும் பாஷ்வர சேனக குணரத்ன, சபையின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் புதிய தலைவராக, ஏற்கெனவே இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவராக கடமையாற்றிய நாலக கொடஹேவா நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இந்தப் பதவி வெற்றிடம் ஏற்பட்டிருந்தது. இதனை நிவர்த்தி செய்யும் வகையில், இந்த பதவி உயர்வு சேனக குணரத்னவுக்கு வழங்கப்பட்டுள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# என்டிபி வங்கி பிராந்திய விஸ்தரிப்புக்கு திட்டம்

அவிவா என்டிபி காப்புறுதி நிறுவனத்தின் மீது என்டிபி வங்கி கொண்டிருந்த பங்குகளை அமெரிக்காவின் ஏஜஏ காப்புறுதி நிறுவனத்துக்கு விற்பனை செய்தமையைத் தொடர்ந்து, அந்த வருமானத்தை பிராந்திய ரீதியிலான பாரிய விஸ்தரிப்பு திட்டத்துக்கு முதலீடு செய்யவுள்ளதாக என்டிபி வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரசெல் டி மெல் தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தி வங்கித்துறையில் நாம் 30 வருட கால அனுபவத்தை கொண்டுள்ள போதிலும், நாடு தற்போது சேவைகளை வழங்கும் மையப்பகுதியாக மாற்றம் கண்டு வருகிறது. எனவே, நாம் இலங்கை நாட்டின் எல்லைகளுக்கு செல்ல வேண்டிய தேவை நிலவுவதை நாம் உணர்ந்துள்ளோம் என்றார்.

என்டிபி தனது வெளிநாட்டு பிரசன்னத்தை பங்களாதேஷில் முதலீடு வங்கிச் செயற்பாடுகளிலும், மாலைதீவுகளில் இயங்கும் லீசிங் நிறுவனமொன்றின் உரிமத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

இலங்கையைச் சேர்ந்த பெருமளவான நிறுவனங்கள் பங்களாதேஷில் தமது வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன. இதன் காரணமாக பங்களாதேஷில் காணப்படும் முதலீட்டு வங்கிச் சேவையை விஸ்தரிக்க திட்டமிட்டுள்ளதுடன், பிராந்தியத்தின் ஏனைய நாடுகளுக்கும் விஸ்தரிப்புக்களை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாக டி மெல் குறிப்பிட்டார்.

# அம்பாந்தோட்டையில் ஏ/தி ஒழுங்கமைப்பு வலயம்

அம்பாந்தோட்டை, மிரிஜ்ஜவில பிரதேசத்தில் ஏற்றுமதி ஒழுங்க மைப்பு வலயமொன்றை நிர்மாணிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதற்காக 228 ஹெக்ரெயர் நிலப்பரப்பு ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வாகனங்கள் ஒன்றுதிரட்டுதல், நிர்மாணத்துறைக்கான உற்பத்திகளை வழங்குதல், செயற்திறன் கொண்ட வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல் உள்ளிட்ட உற்பத்திக் கைத்தொழில் நடவடிக்கைகள் இந்த வயத்தில் முன்னெடுக்கப்படவுள்ளன.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 127.88 | 131.06 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 206.50 | 212.62 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 165.57 | 171.20 |
| சுவிஸ் பிராங் | 136.41 | 141.71 |
| கனேடிய டொலர் | 129.64 | 134.42 |
| அவுஸ்திரேலிய டொலர் | 130.33 | 135.42 |
| சிங்கப்பூர் டொலர் | 103.64 | 107.30 |
| ஜப்பான் யென் | 1.62 | 1.68 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.51 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.31 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளிடையே பட்டி மன்றப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/மத்திய கல்லூரி தமிழ்ச் சங்கம் இவ்வாண்டுக்கான முத்தமிழ் விழாவை முன்னிட்டு யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையே பட்டி மன்றச் சுற்றுப் போட்டியொன்றை நடத்தவுள்ளதாக கல்லூரி அதிபர் எஸ்.கே. எழில் வேந்தன் அறிவித்துள்ளார்.

இப்போட்டிகள் எதிர்வரும் 19ஆம்திகதி காலை 9 மணிக்கு யா/ மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

ஆர்வமுடைய உயர்தர வகுப்பு பாடசாலைகள் எதிர்வரும் 11ஆம் திகதிக்கு முன்னர் 021 2222184,021 222 3658, 0775 478159 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெயர் விபரங்களைப் பதிவு செய்ய முடியும்.

இப்போட்டியில் வெற்றிபெறும் அணிக்கும் சிறப்பாக விவாதிப்பவருக்கும் விருது வழங்கப் படும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (அ-9)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்


திரு. மு. செல்வஸ்தான்

* அதி மேதகு ஜனாதிபதி அவர்களால் திரு. மு. செல்வஸ்தான் (SLPS 2I) அதிபர் இணுவில் இந்துக்கல் லூரி குரு பிரதீபா பிரபா விருது பெற்றமையையும்
* அதி மேதகு ஜனாதிபதி அவர்களால் அலரி மாளிகையில் திரு. ப. சுதானந்தராஜா அவர்கள் இலங்கை அதிபர் சேவை 2II பதவி பெற்றமையையும்
* திருமதி.ச.தேவகரன் (SLPS .I) பிரதி அதிபர் அவர்கள் (வலிகாம வலயம்) நல்லாசிரியராகத் தெரிவு செய்யப்பட்டமையையும்
* திருமதி. த. செந்தில்நாதன் அவர்கள் யாழ். பல்கலைக்கழகத்தில் MEd (Merit) பட்டம் பெற்றமையையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன் புரிச் சங்கம்
யா/இணுவில் இந்துக் கல்லூரி. (593)


## மானிய உரம் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி மேற்கு விவசாய சம்மேளன விவசாயிகளுக்கு நாளை மறுதினம் புதன் கிழமை ஒரு மணியளவில் கைதடி கமநல சேவை நிலையத்தினால் மானிய உரம் வழங்கப்படவுள்ளதாக நாவற்குழி மேற்கு விவசாய சம்மேளன தலைவர் அறிவித்துள்ளார். (அ-8)

# சிறைச்சாலைகள் சர்வதேச தரத்திற்கு அமைய பராமரிக்கப்படுவதில்லை

## மனித உரிமைகள் ஆணைக்குழு குற்றச்சாட்டு

இலங்கையில் உள்ள சிறைச்சாலைகள் சர்வதேசத்திற்கு அமைய பராமரிக்கப்படுவதில்லை என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு குற்றஞ் சுமத்தியுள்ளது.

தற்போது நாட்டிலுள்ள கைதிகளின் எண்ணிக்கைக்கு அமைய போதுமான இடவசதிகள் இல்லாமை முக்கிய பிரச்சினையாகும் என ஆணைக்குழுவின் ஆணையாளர் கலாநிதி மஹானாமஹேவா தெரிவித்துள்ளார்.

இலங்கையிலுள்ள சிறைச்சாலைகளில் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கைதிகளும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

எனினும் அவர்களில் நான்கில் ஒரு பகுதியினருக்கான இடவசதி மாத்திரமே சிறைச்சாலைகளில் காணப்படுவதாக மனித உரிமைகள் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவிக்கையில், இந்தப் பிரச்சினை நீண்டகாலம் நிலவி வருவதாக ஒப்புக் கொண்டார். தற்போது உள்ள சிறைச்சாலைகளின் இடவசதிகளை விரிவு படுத்துவதற்கான வாய்ப்பு இல்லை எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதன் காரணமாக சிறைச்சாலைகளில் உள்ள பழைய கட்டடங்களை புதுப்பிக்கவும் வசதிகளுடன் கூடிய பகுதிகளுக்கு சிறைச்சாலைகளை மாற்றவும் நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கை பூர்த்தியாக நீண்ட காலம் தேவைப்படும் எனவும் சிறைச் சாலைகளில் இருந்து விடுவிக்கப்படும் கைதிகளை மீண்டும் குற்றச்சாட்டுக்களுக்கு இலக்காவதை தடுக்கும் வகையில் சிறைச்சாலைகள் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள உத்தேசித்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# 63 பொலிஸாருக்கு இடமாற்றம்

மூன்று வருடகாலமாக ஒரே பொலிஸ் நிலையத்தில் பணியாற்றிய 63 பொலிஸாருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

நாளை மறுதினம் புதன்கிழமை இவ் இடமாற்றம் நடைமுறைக்கு வரவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

ஹொரணை, இங்கிரியாகம மற்றும் மொரகஸகேண ஆகிய பிரதேச பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றியவர்களுக்கே இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இவர்கள் மேற்கு பிரதேச பொலிஸ் நிலையங்களுக்கு இடமாற்றப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார். (அ-2)


## மணமகள் தேவை — கல்யாண மாலை — மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:- 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-கார்த்திகை 1<br>உயரம்:-5'11"<br>கி.பா:-33.75, 1 இல் செவ்.<br>தொழில்:-கல்வியியற் கல்லூரி ஆசிரியர்<br>B/546 | பிறப்பு:- 1988 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- அவிட்டம் 4<br>உயரம்: 5'4"<br>கி.பா:-29.25<br>தகைமை: சுயதொழில்<br>G/596 |
| பிறப்பு:- 1964 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-பரணி 3<br>உயரம்:-5'10"<br>கி.பா:-56, 8 இல் செவ்.<br>தொழில்: கனடா PR<br>B/549 | பிறப்பு:- 1986 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- சுவாதி 4<br>உயரம்: 5'2"<br>கி.பா:-63.75, 7 இல் செவ்<br>தகைமை: B.A வங்கி உத்தியோகத்தர்<br>G/593 |
| பிறப்பு:-1971 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-பூரட்டாதி 2<br>உயரம்:-5'7"<br>கி.பா:-31, 12 இல் செவ்.<br>தொழில்:- கனடா PR<br>B/550 | பிறப்பு:- 1985 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: ரோகினி 1<br>உயரம்: 5'1"<br>கி.பா: 42.5<br>தகைமை:-B.Bm(uk), cima 2nd yr<br>G/598 |
| பிறப்பு:- 1977 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-உத்தரம் 4<br>உயரம்:-5'7"<br>கி.பா:-26.25<br>தொழில்:-வாகன சாரதி (தனியார் கம்பனி)<br>B/555 | பிறப்பு:- 1978 இந்து<br>நட்சத்திரம்:-. பரணி 1<br>உயரம்: 5'4"<br>கி.பா:10.75<br>தகைமை:-B.M.A.தபால் அதிபர்<br>G/306 |

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com

ஊடக அனுசரணை வலம்புரி



## பாராட்டி வாழ்த்துகின்றோம்


"பிரதீபா பிரபா" ஜனாதிபதி விருது பெறும் எமது முன்னாள் அதிபரும் தற்போதைய யா/இணுவில் இந்துக் கல்லூரி அதிபருமாகிய திரு.மு.செல்வஸ்தான்


"குரு பிரதீபா" வலய மட்ட விருது பெறும் எமது ஆசிரியை செல்வி. தி.மசிந்தா


ஆரம்பப் பிரிவு (தமிழ்) கற்பித்தல் உபகரணப் போட்டியில் முதலிடம் பெற்ற எமது ஆசிரியை திருமதி. றே.நிகோல் சுரேன்குமார்


இடைநிலைப் பிரிவு (கணிதம்) கற்பித்தல் உபகரணப் போட்டியில் முதலிடம் பெற்ற எமது ஆசிரியர் திரு.ச.சதானந்தன்

ஆகியோர் சனிக்கிழமை நடைபெற்ற வலிகாம கல்வி வலய ஆசிரிய தின வைபவத்தில் கௌரவிக்கப்பட்டதையிட்டு அவர்களை வாழ்த்துவதுடன் அவர்களின் பணி மேலும் சிறக்க இறையருள் வேண்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலமரத்தை பாதுகாக்க இப்படியும் செய்கிறார்கள்


(மிருசுவில்)

வீதியோரங்களில் காணப்படும் பெரிய மரங்கள் இரவோடு இரவாக திடீரென கடவுளாக மாறுவதனால் வீதி அபிவிருத்தி பணிகளில் பெரும் சிரமங்கள் ஏற்படுவதாக குறிப்பிடப்படுகிறது.

இவ்வாறான செயற்பாடுகள் அராலி மத்தி முருக மூர்த்தி பாடசாலைக்கு அருகாமையில் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் தெரிய வருவது,


சித்தன்கேணி- அராலி இடைப்பட்ட வீதி அகலிப்பு பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன. இதற்காக வீதிக்கு அருகில் உள்ள பழைமைவாய்ந்த பெரிய ஆலமரங்களை வெட்டுவதற்கு வீதி அபிவிருத்தி பணியாளர்கள் தீர்மானித்ததை அறிந்து கொண்ட குறித்த பகுதி இளைஞர்கள் இரவோடு இரவாக மேற்குறித்த மரங்களுக்கு ஒரு தொகை பட்டுத் துணிகளைக் கட்டி அதனைக் கடவுளாக மாற்றியமைத்தனர்.

மறுநாள் அதிகாலை வேளை வந்து பார்த்த வீதி அபிவிருத்தி பணியாளர்கள் மேற்குறித்த மரங்களை தறிக்காது விட்டுச் சென்றுள்ளனர். இதனால் வீதிப் புனரமைப்பு பணிகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளமையை காணக்கூடியதாக உள்ளது. (அ-3-85)




# இருபாலைச் சந்தியில் நேற்று பாரிய விபத்து

## 4 பேர் படுகாயமடைந்தனர்



(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணிகளுடன் வந்து கொண்டிருந்த மினிபஸ் இருபாலைச் சந்தியில் நேற்று விபத்துக்குள்ளானதில் நால்வர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தனியார் சிற்றூர்தி இரண்டு, ஒன்றை ஒன்று முந்திச் செல்ல முற்பட்டபோது வீதி ஓரமாயிருந்த சீமெந்தினாலான பெயர் பொறிக்கப்பட்ட கல்லின் மீது வேகமாக மோதிக் கொண்டதனாலேயே இந்த விபத்து ஏற்பட்டது. பருத்தித்துறையிலிருந்து பயணிகளுடன் குறித்த இரண்டு தனியார் சிற்றூர்திகள் மிகவும் வேகமாக பயணித்துள்ளன. இதன்போது விபத்துக்குள்ளான மினிபஸ்ஸை விபத்தில் சிக்கும் வகையில் மற்றைய மினி பஸ்சாரதி வாகனத்தைச் செலுத்தியதாக தெரிய வருகின்றது. இதன்போது இவ் விபத்து ஏற்பட்டுள்ளது.

இவ்விபத்தில் தனியார் சிற்றூர்தியில் பயணித்த இரண்டு பயணிகள் படுகாயமடைந்தனர். மேலும் பேருந்துக்காக வீதியோரமாக காத்திருந்த இரண்டு பயணிகளும் விபத்தில் சிக்கினர்.

குறித்த விபத்தில் காயமடைந்தவர்கள் கோப்பாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இருப்பினும் விபத்து இடம்பெற்ற இடத்தில் உரிய விசாரணைகளை மேற்கொள்ள பொலிஸார் தவறியதோடு தனியார் சிற்றூர்தியையும் உடனடியாக அங்கிருந்து கொண்டு சென்று விட்டனர். இருபாலைச் சந்திக்கு அண்மையாக கடந்த 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.20 மணியளவில் தனியார் சிற்றூர்தி ஒன்றும் தனியார் பேருந்து ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் மூன்று பேர் பலியானதோடு 11 பேர் படுகாயமடைந்திருந்தனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பான அதிர்ச்சியிலிருந்து அப்பகுதி மக்கள் மீள்வதற்கிடையில் மீண்டும் நேற்றைய தினம் விபத்து இடம்பெற்றுள்ளது. குறித்த பகுதியில் வீதி விபத்துக்கள் அதிகம் ஏற்படக்கூடிய சூழ்நிலை காணப்படுவதாகவும் அந்தப் பகுதியில் பொலிஸார் வீதி போக்குவரத்து ஒழுங்கினை கடைப்பிடிக்காதவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்காக நிறுத்தப்பட வேண்டும் எனவும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்தோடு கோப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் இடம்பெறும் குற்றச் செயல்கள் தொடர்பில் பொலிஸார் உரிய விசாரணைகளை மேற்கொள்வதில்லை எனவும் பிரதேச மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (அ-6)

# கோப்பாய் பிரதேசத்தில் விதை தானியம் வழங்கல்

(நல்லூர்)

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 31 கிராம சேவையாளர் பிரிவிலும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் திவிநெகும திட்டத்தின் கீழ் விதை தானியங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ் விதை தானியங்கள் கடந்த வியாழக்கிழமை தொடக்கம் கிராம சேவையாளர் ஊடாக குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

இவை கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள சகல குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன. இவ் விதை தானியங்களை வழங்குவதன் மூலம் அக் குடும்பங்கள் பயன்பெற முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ-3-134)

# சிறுவர், முதியோர் தினம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செலயகத்தின் சர்வதேச சிறுவர், முதியோர், மாற்றுவலுவுள்ளோர் தினம் எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக கோப்பாயின் முன்னாள் பிரதேச செயலரும் யாழ். மாவட்டச் செயலகத்தின் முன்னாள் திட்டப் பணிப்பாளருமாகிய கே.கேதீஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட சமூக சேவைகள் அதிகாரி ஆ.ஞானவேல், கோப்பாயின் முன்னாள் சமூக சேவைகள் அதிகாரியும் கிளிநொச்சி மாவட்ட தற்போதைய சமூக சேவைகள் அதிகாரியுமான வே.தபேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கலை நிகழ்வுகள், போட்டிகளில் பங்கேற்றவர்களுக்கு பரிசில் வழங்கல் சிறுவர்களுக்கான பரிசில் வழங்கல், முதியோர் கௌரவிப்பு, மாற்றுவலுவுள்ளோர் கௌரவிப்பு ஆகியன நடைபெறவுள்ளன. (அ-6)

# பசளை வழங்குவதில் தாமதம்; விவசாயிகள் விசனம்

(தனங்கிளப்பு)

தனங்கிளப்பு மறவன்புலோ விவசாயிகளுக்கான பெரும்போக நெற்பயிர்ச்செய்கைக்கான நிலப்பசளை காலதாமதமாவதற்கு பின்னரே இப்பகுதி விவசாயிகளுக்கு கைதடி கமநல சேவை திணைக்களத்தினால் வழங்கப்படவுள்ளதாக விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளார்.

விவசாயத்தையே தமது வாழ்வாதாரமாக கொண்டுள்ள இம் மக்களின் 90 வீதமான பயிர்ச்செய்கை நிலங்களில் நெற்பயிரிடப்படும் இந்நிலப்பசளை வழங்கப்படாமையால் கூடுதலான விளைச்சலை பெற முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதோடு இலாபத்தையும் பெற முடியாத நிலை ஏற்படலாம்.

எனவே, இனிவரும் காலங்களிலாவது பயிர்ச்செய்கை சூழ்நிலைக்கு ஏற்ப நிலப்பசளைகளை வழங்கி உதவ வேண்டுமென அப்பகுதி விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-37)

# தரம் 4 மாணவர்களுக்கு கணித செயற்பாடுகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் தரம் 4 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கான கணித செயற்பாடுகள் நான்கு மத்திய நிலையங்களில் எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதற்கமைய யா/கைதடி முத்துகுமாரசாமி ம.வி., வரணி ம.வி., மட்டுவில் ம.வி., சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை ஆகிய நிலையங்களில் இடம்பெறவுள்ளது.

எனவே, தமக்குரிய நிலையங்களுக்கு உரிய நேரத்திற்கு பெற்றோருடன் சமூகமளித்து கணித செயற்பாடுகளில் ஈடுபட்டு மாணவர்கள் விளக்கங்களை பெற்றுக் கொள்ளுமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனையின் ஆரம்பக் கல்விப் பிரிவு உதவிக் கல்விப்பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராஜா அறிவித்துள்ளார். (அ-3-29)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்வதற்காகவும் புதிய உயரழுத்த மின்மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் இணைப்பு வேலைகளுக்காகவும் இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய அளவெட்டி, மல்லாகம் ஒரு பகுதி, பன்னாலை, வித்தகபுரம், சிறுவிளான், சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப்பகுதி ஆகிய இடங்களிலும் நாளை மறுதினம் புதன்கிழமை மற்றும் எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரையும் அளவெட்டி, மல்லாகம் ஒரு பகுதி, பன்னாலை, வித்தகபுரம், சிறுவிளான் ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்தின விழா

(மிருசுவில்)

சுழிபுரம் விக்டோறியா கல்லூரியின் ஆசிரியர் தினவிழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரி றிச்வே மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கல்லூரி பழைய மாணவனும் விக்டோறியன் எந்திரியுமான உமாபதி கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (அ-3-85)

# இலங்கையில் அதிகளவான வெப்பநிலை பதிவாகியுள்ளது

## வளிமண்டலவியல் திணைக்களம்

இலங்கையில் என்றுமில்லாத அதிகளவு வெப்பநிலை பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் கடந்த வாரம் முப்பதாண்டுகளாக இல்லாத வகையில் அதிகளவு வெப்பநிலை பதிவாகியுள்ளது. கடந்த வாரம் வவுனியாவில் 40.1 பாகை செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளது. பொலநறுவை மாவட்டத்தில் 40 பாகை செல்சியஸ் வெப்பம் நிலவியது.

அநுராதபுரம், பொலநறுவை, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் அடுத்த சில நாட்களுக்கு இதுபோன்று கடும் வெப்பநிலை காணப்படும் என்று வளிமண்டலவியல் திணைக்கள அதிகாரியான ஜீவன் கருணாரத்ன கூறியுள்ளார்.

மலையகத்திலும் வெப்பநிலை சிறிதளவு அதிகரித்துள்ளது. கண்டியில் 32.6 பாகை செல்சியஸ் வெப்பநிலை காணப்பட்டது.

அதேவேளை கொழும்பில் சராசரி வெப்பநிலையான 31 பாகை செல்சியசே நிலவுகிறது. (அ-2)

# முச்சக்கர வண்டிகளின் சேவை தனித்துவமாக அமைய வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

பொதுமக்களுக்கு பாதுகாப்பும் நம்பிக்கை ஏற்படுத்தும் வகையிலும் முச்சக்கரவண்டிகளின் சேவைகள் அமையப்பெற வேண்டுமென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

முனீஸ்வரன் வீதியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்திச் சேவை தலைமைக்காரியாலயத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற முச்சக்கரவண்டிகளுக்கு கட்டண அறிவீட்டு மீற்றர் பொருத்தும் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுமக்களுக்கு பாதுகாப்பு நம்பிக்கை ஏற்படுத்துவது மட்டுமல்லாது வாடகைச் சேவையில் ஈடுபடும் சகல முச்சக்கர வண்டி உரிமையாளர்களும் தமது வாழ்வாதார மேம்பாடு தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும். இதன் பிரகாரம் கட்டண அறவீட்டு மீற்றரைப் பொருத்துவதனூடாக பொதுமக்கள் விரைவானதும் நம்பிக்கையானதும் பாதுகாப்பானதுமான சேவைகளை பெற்றுக் கொள்ளும் வகையில் சேவையில் ஈடுபட வேண்டுமென்றும் போக்குவரத்து நடைமுறைகளையும் கடைப்பிடிக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

அத்துடன் பெண்களும் பல்வேறு துறைகளில் தொழில் புரிந்து வரும் இன்றைய சூழ்நிலையில் முச்சக்கரவண்டி ஓட்டுநர்களாகவும் பெண்கள் செயற்பட்டு வரும் நிலையில் அவர்களது உரிமைகளும் மதிக்கப்பட வேண்டுமெனவும் குறிப்பிட்டார். (அ-2)

# யாழ். கோட்டைப் பகுதியில் தகவல் மையம் அமையும்

யாழ்ப்பாணக் கோட்டைக்குள் பிரவேசிக்கும் இடத்தில் தகவல் மையமொன்று அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. வரலாற்று தகவல்களை உள்ளடக்கி இந்தத் தகவல் மையம் அமைக்கப்படவுள்ளதாக இலங்கை தொல்பொருள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இம் மையத்தை அமைப்பதற்கு நெதர்லாந்து அரசாங்கம் 104 மில்லியன் ரூபாவினை வழங்கவுள்ளது.

யாழ்ப்பாண வரலாற்றை அறிந்து கொள்வதற்கும் ஏனைய தகவல்களைப் பெற்றுக் கொள்ளவும் இந்த மையம் பயன்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஆண்டின் இறுதிக்குள் குறித்த தகவல் மையம் அமைக்கும் பணிகள் பூர்த்தியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணக் கோட்டையை புனரமைக்கும் பணிகள் 60 வீதம் பூர்த்தியடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சுரங்கப் பாதைக்குள் சுற்றுலாப் பயணிகள் பிரவேசிக்கக் கூடிய வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தொல்பொருள் திணைக்களம் அறிவித்துள்ளது. (அ-4)

# மன்னார் மேலதிக அரசாங்க அதிபரின் புதல்வர் விபத்தில் பலி

மன்னார்- தலைமன்னார் பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரின் புதல்வரான வெக்ஸ்மன் லெம்பேட் (வயது- 20) என்பவர் உயிரிழந்ததோடு அவருடன் பயணித்த இருவர் படுகாயமடைந்து மன்னார் பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரு கின்றனர். இச் சம்பவம் நேற்று முன்தினம் மதியம் இடம்பெற்றுள்ளது. குறித்த மூன்று இளைஞர்களும் அன்றைய தினம் முச்சக்கர வண்டி ஒன்றில் மன்னாரில் இருந்து தலைமன்னார் பொலிஸ் நிலையத்திற்கு சென்று விட்டு மீண்டும் மன்னாரை நோக்கி வந்து கொண்டிருந்த போது பேசாலை நடுக்குடா வீதியில் மதியம் 2.30 மணியளவில் முச்சக்கரவண்டி கட்டுப்பாட்டை இழந்த நிலையில் பனை மரத்துடன் மோதி விபத்திற்குள்ளாகியுள்ளது.

இதன் போது படுகாயமடைந்த 3 இளைஞர்களுக்கும் சில மணித்தியாலங்களின் பின்னர் மன்னார் வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது.

படுகாயமடைந்த மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரின் புதல்வர் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டு வந்த நிலையில் மாலை 6.30 மணியளவில் உயிரிழந்தார். ஏனைய இரண்டு இளைஞர்களும் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலதிக விசாரணைகளை தலைமன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2012.10 08

★ 1573-எண்பதாண்டுகள் போரில் நெதர்லாந்து முதலாவது வெற்றியை ஸ்பெயினுக்கெதிராக பெற்றது.

★ 1582-கிரெகொரியின் நாட்காட்டி அறிமுகப்படுத்தப்பட்டதை அடுத்து இத்தாலி, போலந்து, போர்த்துக்கல், ஸ்பெயின் ஆகிய நாடுகளில் புதிய நாட்காட்டியில் இவ்வாண்டின் இந்நாள் இடம்பெறவில்லை.

★ 1862-அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்கப் படைகள் கென்டக்கியில் கூட்டமைப்புப் படைகளின் முற்றுகையைத் தடுத்து நிறுத்தினர்.

★ 1871-சிகாகோ பெருந்தீ: சிகாகோவில் இடம்பெற்ற பெரும் தீயில் ஒரு இலட்சம் பேர் வீடுகளை இழந்தனர். விஸ்கொன்சின் மாநிலத்தில் இடம்பெற்ற தீயில் 2500 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.

★ 1895-கொரியாவின் கடைசி அரசி ஜோசியனின் மின் ஜப்பானியர்களால் கொல்லப்பட்டாள்.

★ 1912-முதலாவது பால்கன் போர் ஆரம்பமானது. மொண்டெனேகுரோ துருக்கியுடன் போர் தொடுத்தது.

★ 1918-இரண்டாம் உலகப் போர் பிரான்சில் அமெரிக்கக் கோப்ரல் அல்வின் யோர்க் தனியாளாக 25 ஜேர்மனிய இராணுவத்தினரைக் கொன்று 132 பேரைக் கைப்பற்றினர்.

★ 1932-இந்திய விமானப் படை நிறுவப்பட்டது.

★ 1939-இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனி மேற்கு போலந்தை இணைத்துக் கொண்டது.

★ 1952- லண்டனில் தொடரூந்து விபத்தில் 112 பேர் உயிரிழந்தனர்.

★ 1967-கெரில்லா இயக்கத் தலைவர் சேகுவேராவும் அவரது சகாக்களும் பொலிவியாவில் கைப்பற்றப்பட்டனர்.

★ 1973-சூயஸ் கால்வாயின் இஸ்ரேலியப் பக்கத்தில் இடம்பெற்ற போரில் 140 இஸ்ரேலியத் தாங்கிகள் எகிப்திய படைகளினால் அழிக்கப்பட்டன.

★ 1982-சொலிடாரிட்டி தொழிற்சங்கம் போலந்தில் தடை செய்யப்பட்டது.

★ 1990-ஜெருசலேமில் இஸ்ரேலியக் பொலிஸ்துறையினர் மசூதி ஒன்றைத் தாக்கியதில் 17 பாலஸ்தீனர் கொல்லப்பட்டு 100 பேருக்கு மேல் காயமடைந்தனர்.

★ 2001-இத்தாலியின் மிலான் நகரில் இரண்டு விமானங்கள் நடுவானில் மோதியதில் 118 பேர் உயிரிழந்தனர்.

★ 2001- இத்தாலியின் மிலான் நகரில் இரண்டு விமானங்கள் நடுவானில் மோதியதில் 118 பேர் உயிரிழந்தனர்.

★ 2005-03:50 UTC இற்கு காஷ்மீரில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் பாகிஸ்தான், இந்தியா, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் மொத்தம் 74 ஆயிரத்து 500 பேர் கொல்லப்பட்டு ஒரு இலட்சத்து 6 ஆயிரம் பேர் காயமடைந்தனர்.

### பிறப்பு

★ 1971-பா.ராகவன், தமிழக எழுத்தாளர்


### இறப்புக்கள்

★ 1992-வில்லி பிரான்ட், ஜேர்மனி நாட்டு ஜனாதிபதி, அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவர் (பி.1913)

★ 1959-பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், கவிஞர், பாடலாசிரியர் (பி.1930)

★ 2003-வீரமணி ஐயர், ஈழத்துக் கவிஞர் (பி.1931)

### பா.ராகவன்



இவர் ஒரு தமிழ் எழுத்தாளர் மற்றும் பத்திரிகையாளர் ஆவார்.

வாழ்க்கைக் குறிப்பு தரமணி மத்திய தொழில்நுட்பக் கல்லூரியில் இயந்திரவியல் பொறியியல் பட்டயப்படிப்பு முடித்தவர். அமுதசுரபி, தாய் போன்ற இதழ்களில் சில காலம் பணியாற்றிவிட்டு 1992 ஆம் ஆண்டு டிசெம்பர் 6 ஆம் திகதி கல்கியில் சேர்ந்து பணியாற்றத் தொடங்கினார். திரைப்பட விமர்சகராக நுழைந்து 2000 ஆம் ஆண்டு வரை கல்கியில் துணையாசிரியராகப் பணியாற்றினார். அதன்பின் குமுதம் வார இதழின் துணையாசிரியாக மூன்று ஆண்டு காலம் பணியாற்றினார்.

இவர் தற்போது நியூ ஒரைசன் மீடியா நிறுவனத்தின் முதன்மை ஆசிரியராகப் பணிபுரிகிறார். சில தொலைக்காட்சித் தொடர்களுக்குத் திரைக்கதை வசனம் எழுதியிருக்கும் இவர் இப்போது திரைப்படங்களுக்கும் திரைக்கதை வசனம் எழுதுகிறார்.

### விருது

பாரதிய பாஷா பரிஷத் இலக்கியப் பீடம் சிறந்த நாவலாசிரியர் விருது (அலகிலா விளையாட்டு- 2003), திருப்பூர் தமிழ்ச்சங்கப் பரிசு (மெல் லியம் நாவலுக்காக), கம்பம் பாரதி இலக்கியப் பேரவை விருது (இராக் ப்ளஸ் சதாம் மைனஸ் சதாம்- 2008)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவிரியில் இருந்து தமிழ்நாட்டுக்கு தண்ணீர் வழங்குவதற்கு எதிர்ப்பு

## பிரதமர், தமிழக முதல்வரின் உருவப்பொம்மைகள் எரிப்பு



காவிரியிலிருந்து தமிழ்நாட்டிற்கு தண்ணீர் கொடுப்பதை நிறுத்த வலியுறுத்தி கன்னட அமைப்பினர் நேற்று முன்தினம் போராட்டம் நடத்தினர். கன்னட ஜாக்குறுதி வேதிகா, கன்னட ரக்ஷன வேதிகை, கடிநாடா, யுவசேனா போன்ற கன்னட அமைப்பினர் தமிழக கர்நாடக எல்லையில் பிரதமர் மன்மோகன் சிங், முதல்வர் ஜெயலலிதாவை கண்டித்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பேருந்து போக்குவரத்து நிறுத்தப்பட்டதாலும் மறியல் போராட்டத்தாலும் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. கன்னட ஜாக்குறுதி வேதிகா மாநில தலைவர் மஞ்சுநாததேவா தலைமையில் அமைப்பினர் ஆடு, மாடுகளை ஊர்வலமாக அழைத்து வந்து எல்லையில் போராட்டத்தில் ஈடுபட்டனர். டயர்களை தீயிட்டு கொளுத்தி சாலையில் போட்டும் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இதன்பின் கன்னட, கடிநாடா, யுவசேனா அமைப்பினர் கழுதைகள் கழுத்தில் பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் முதல்வர் ஜெயலலிதா உருவப்படத்தை தொங்கவிட்டு ஊர்வலமாக தமிழக கர்நாடக எல்லைக்கு வந்தனர்.

பின்னர் மன்மோகன் சிங், ஜெயலலிதா உருவப் பொம்மைகளை எரித்தனர். ஊர்வலமாக எல்லையை நோக்கி வந்த கன்னட அமைப்பினரை அம்மாநில பொலிஸார் தடுக்கவில்லை என்றும் குறிப்பிடப்படுகிறது. (அ-2)

# 19 சுற்று பேச்சுக்களின் போது எட்டப்பட்ட விடயங்களை அரசு செயற்படுத்த வேண்டும்

## அப்போது தான் தெரிவுக்குழுவுக்கு வருவோம் என்றார் அரியம் எம்.பி,

(மட்டக்களப்பு)

அரசுடன் பேசுவதற்கு தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தயாராக இருக்கின்ற போதும் அதனைப் பயன்படுத்திக்கொள்ளாமல் அரசு காலத்தை இழுத்தடிக்கிறது.

ஏற்கனவே நடைபெற்ற 19 சுற்றுப் பேச்சுவார்த்தைகளிலும் எட்டப்பட்ட விடயங்களையும் நடைமுறைப்படுத்த அரசு முன்வருமானால் நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் பங்குபற்றுவதற்கு கூட்டமைப்பு தயாராக இருக்கின்றது. தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் கூட்டமைப்பு பங்கு பெறுவது தொடர்பில் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது,

நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் பங்கு கொள்ளமாட்டோம் என கூட்டமைப்பு ஒரு போதும் சொல்லவில்லை. தெரிவுக்குழுவில் இடம்பெறுவதற்கு எப்போதும் தயாராக இருக்கிறோம். அதற்கு அரசாங்கம் ஏற்கனவே எம்முடன் பேசப்பட்ட விடயங்களை நிறைவேற்ற முன்வர வேண்டும்.

கடந்த காலங்களில் குறிப்பாக கடந்த ஜனவரியில் 18, 19 ஆம் திகதிகளில் கூட்டமைப்பை பேச்சுவார்த்தைக்கு வருமாறு அழைப்பு விடுத்த அரசு பின்னர் கூட்டமைப்பை ஏமாற்றியது. அழைப்பு விடுத்த அரசாங்கமே பேச்சுக்கு வரவில்லை.

அரசு குறிப்பிட்ட நேரத்தில் பேச்சுவார்த்தைக்கு சென்ற கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழு அங்கு காத்திருந்து விட்டு ஏமாற்றத்துடன் திரும்பியது. ஏற்கனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் எட்டப்பட்டு உடன்பாடு காணப்பட்ட விடயங்களில் எதனையும் அரசாங்கம் செய்யாமல் விட்டுவிட்டு மீண்டும் மீண்டும் எம்மை நாடாளுமன்ற தெரிவுக் குழுவுக்கு வாருங்கள் என்று கூறுவதில் எவ்வித நியாயமும் இல்லை. (அ-2)

# மனவளக்கலை பேராசிரியர் இந்திரா நேற்று யாழ்.வருகை

(யாழ்ப்பாணம்)

மனவளக்கலை யோகா பயிற்சிகளை வழங்குவதற்காக இந்தியாவின் தமிழ்நாட்டிலிருந்து கடந்த முதலாம் திகதி இலங்கைக்கு வருகை தந்த மனவளக்கலை பேராசிரியர் திருமதி எஸ்.இந்திரா நேற்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ளார்.

இவர் எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை யாழ்ப்பாணத்தில் தங்கி நின்று மனவளக்கலை யோகா பயிற்சிகளை யாழ்.மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு வழங்கவுள்ளார்.

இதன் ஓர் பகுதியாக இன்று தொடக்கம் எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை வடமராட்சி பாடசாலைகளில் உள்ள மாணவர்களுக்கு பயிற்சியினை மேற்கொள்ளவுள்ளார்.

இதற்கமைய இன்றையதினம் யாழ். புனித தோமஸ் மகளிர் பாடசாலையிலும் நாளை செவ்வாய்க்கிழமை யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரியிலும் நாளை மறுதினம் புதன்ளளகிழமை யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியிலும் எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக்கிழமை யா/தேவரையாளி மகாவித் தியாலயத்திலும் மறுநாள் வெள்ளிக்கிழமை கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியிலும் இவர் மாணவர்களுக்கு பயிற்சிகளை வழங்கி வைப்பார்.

இப்பயிற்சியானது இலங்கை மனவளக் கலை மன்றத்தின் சார்பிலும் யாழ்ப்பாணம் வண்ணார்ப்பண்ணை தவமையத்தின் ஏற்பாட்டிலும் வடமாகாண கல்வி அமைச்சின் அனுசரணையுடனும் நடத்தப்படவுள்ளது.

அத்துடன் மனவளக்கலையின் முதல் கட்டமாக ஆளுமையின் திறன் ஊக்க பயிற்சியின் ஓர் அங்கமாகிய காயகல்ப பயிற்சி மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இப்பயிற்சியானது மாணவர்களின் மனவளத்தை மேம்படுத்தி அறிவுக்கூர்மையையும் ஞாபக ஆற்றலையும் விருத்தி செய்து ஒழுக்க நெறி அறநெறிக்கு உதவுவதாக அமையவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள 7 பாடசாலைகளில் கடந்த 2 ஆம் திகதி தொடக்கம் 5 ஆம் திகதி வரை இவரால் இப்பயிற்சி நடத்தப்பட்டுள்ளது. இதில் ஆயிரம் மாணவர்கள் வரை பங்கேற்றுள்ளனர். (அ-2)

# பணிப்பகிஷ்கரிப்பு முடிவுக்கு வந்ததும் விடைத்தாளை மதிப்பிட தயார்

## விரிவுரையாளர் சம்மேளனம் தெரிவிப்பு

தமது பணிப்பகிஷ்கரிப்பு முடிவுக்கு வந்தவுடன் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளில் இணையவுள்ளதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

நிதி அமைச்சின் செயலாளருடன் இன்று நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைகளின் போது இணக்கப்பாடு ஏற்பட்டால் பணிப்பகிஷ்கரிப்பு முடிவுக்கு கொண்டு வரப்படும் என சம்மேளனத்தின் செயலாளர் டெரன்ஸ் மதுஜித் கூறியுள்ளார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளை அடுத்து பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இந்த தீர்மானங்களை மேற்கொண்டுள்ளனர்.

எவ்வாறெனினும் இன்றைய தினம் ஏற்படுத்திக்கொள்ளப்படும் இணக்கப்பாடுகள் தொடர்பில் தமது உறுப்பினர்களை தெளிவுபடுத்தி அவர்களுடைய கருத்துக்களை கேட்டறிந்த பின்னரே பணிப்பகிஷ்கரிப்பு கைவிடப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் ஆரம்பிக்கப்பட்டால் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் தொடர்பான பிரச்சினை முடிவுக்கு வரும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கல்வித்துறைக்கு ஒதுக்கப்பட வேண்டிய நிதி தொடர்பான தமது சம்மேளனத்தின் நிபந்தனைக்கும் அரசாங்கத்தின் நிலைப்பாட்டிற்கும் இடையே கருத்து முரண்பாடுகள் நிலவுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் இந்த முரண்பாடுகளை பணிப்பகிஷ்கரிப்பை முடிவுக்கு கொண்டு வரும் விடயத்துடன் தொடர்புபடுத்தாமல் இருப்பதற்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

நாட்டின் மொத்த உற்பத்தியில் ஆறு வீதத்தை கல்வித்துறைக்கு ஒதுக்க வேண்டும் என்ற தமது நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை எனவும் சம்மேளனம் தெரிவித்துள்ளது. (அ-2)

# ஆங்கிலபாட தேர்ச்சி

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் தரம் 3,4,5 வகுப்புக்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான ஆங்கில பாட பரீட்சை மூன்று மத்திய நிலையங்களில் எதிர்வரும் 17 ஆம் திகதி புதன்கிழமை பி.ப ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது.

தென்மராட்சி கல்வி வலயத்தின் ஆரம்பக்கல்வி பிரிவினரால் வெளியிடப்பட்ட ஆங்கில சொற்களஞ்சியத்தில் இருந்து மாணவர்களுக்கான இத்தேர்ச்சிகள் நடத்தப்படவுள்ளது.

இத் தேர்ச்சியில் சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை, கைதடி முத்துக்குமாரசாமி ம.வி., கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலை ஆகிய மத்திய நிலையங்களிலேயே நடத்தப்படவுள்ளது.

எனவே, குறித்த மாணவர்களை தமக்கென ஒதுக்கப்பட்ட நிலையங்களுக்கு உரிய நேரத்திற்கு சமூகமளிக்குமாறு தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக ஆரம்பக்கல்வி பிரிவு உதவிக்கல்விப்பணிப்பாளர் த.ஶ்ரீஸ்கந்தராஜா கேட்டுள்ளார். (அ-3-29)

# வாக்காளர் பதிவேடு தொடர்பில் ஆட்சேபனை தெரிவிக்க காலஅவகாசம்

## தேர்தல்கள் செயலகம் அறிவிப்பு

(கொழும்பு)

2012 ஆம் ஆண்டின் வாக்காளர் பதிவேட்டில் புதிதாக பெயர் உள்ளடக்கப்பட வேண்டியவர்களுக்கான உரிமைக் கோரிக்கை மற்றும் பெயர் நீக்கப்பட வேண்டியவர்கள் குறித்து ஆட்சேபனை தெரிவிப்பதற்கும் தேர்தல்கள் செயலகம் கால அவகாசம் வழங்கியுள்ளது.

கடந்த ஜுன் மாதம் முதல் சேகரிக்கப்பட்ட பெயர் விபரங்களின் அடிப்படையில் புதிய வாக்காளர் பதிவேடுகள் தயாரிக்கும் பணிகள் மும்முரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். மொஹமட் குறிப்பிட்டார்.

இதன் அடிப்படையில் வாக்காளர் பதிவேட்டில் புதிதாக உள்ளடக்கப்பட வேண்டியவர்களின் பெயர்களுக்கான உரிமைக் கோரிக்கைக்கான படிவத்தையும் பெயர் நீக்கப்பட்ட வேண்டியவர்கள் தொடர்பில் ஆட்சேபத்தை தெரிவிப்பதற்கான படிவத்தையும் அனைத்து கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களிலும் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் அவர் கூறினார்.

புதிய வாக்காளர் பதிவேட்டு விபரங்களுடன் நடைமுறையிலுள்ள 2011 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பதிவேடும் கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களில் கடந்த 4 ஆம் திகதி முதல் எதிர்வரும் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக பிரதித்தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.மொஹமட் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

64

# மகா பராக்கிரமபாகு



கலாநிதி. க.குணராசா (செங்கை ஆழியான்)
திருமதி. கமலா. குணராசா

**பராக்கிரமபாகுவின் திக்விஜயம்**

...பின்னர் தொடர்ந்து பயணப் பட்டு தக்கிணதேச எல்லைக் கிராம மான சாரகமத்திற்குள் பிரவேசித் தான். இளவரசன் நாட்டிற்குள்



பராக்கிரமப்பாகுவின் காலத்து பதவியா கல்வெட்டில் பொறிக்கப்பட்ட தாமரை வடிவான குறியீடு

திரும்பிய செய்தியைக் கேள்விப்பட்ட மன்னன் கீர்த்தி ஸ்ரீமேகன் மகிழ்ச்சி அடைந்தான். தூதுவர்களை அனுப்பி வரும்படி அழைப்பு விடுத்தான். அதற்கிடையில் மகன் வந்திருக்கும் செய்தி கேள்விப்பட்ட அவனுடைய தாய் இரத்தினாவளி அவனை தேடி வந்தாள். மன்னன் கீர்த்தி ஸ்ரீமேக னுக்கும் மகனுக்கும் ஏற்பட்ட மனஸ்தாபத்தினால் ஏதாவது அசம் பாவிதம் நடந்துவிடலாம் என எண்ணி மன்னனைச் சந்தித்து, அவனைச் சமாதானப்படுத்தினாள். பின்னர் மகனைச் சந்தித்து விபரம் தெரிவித்து மன்னனிடம் அழைத்து வந்தாள். முதலில் தலைநகர் சங்கத்தாலிக்கு வர மறுப்புத் தெரி வித்த இளவரசன் தாயாரின் வற்புறுத் தலால் தலைநகருக்கு வந்து மன்ன னைச் சந்தித்தான்.


பெறாமகனைக் கண்ட கீர்த்தி ஸ்ரீ மேகன் பூரிப்படைந்தான். "இளவர சனுக்குரிய அதிகாரங்கள் அனைத் தும் உனக்காகுக" என வரவேற்றுத் தழுவி மகிழ்ந்தான். அதன் பின்னர் நீண்டகாலம் கீர்த்தி ஸ்ரீமேகன் உயிர் வாழவில்லை. அவனுடைய இறுதிச் சடங்குகளை பராக்கிரமபாகு சிறப் பாக நிறைவேற்றி அரசகட்டி லேறினான். தக்கிணதேசத்தின் மன்னனாக முடிபுனைந்து கொண் டான். அத்துடன் தான் மன்னனாகிய செய்தியை தன் சிறிய தந்தையார் களான இராஜரட்டை கஜபாகுவுக் கும் உருகுணை மானவர்மனுக்கும் தூதுவர் மூலம் அறிவித்தான்.

**அரசனாக முடிபுனைதல்**

தக்கிணதேசத்தின் அரசனாக முடிபுனைந்ததும் தனது நீண்ட நாட்கனவுகளை நிறைவேற்றிக் கொள்ள விரும்பினான். இலங்கை முழுவதையும் ஒரு குடைக்கீழ் கொண்டு வரவேண்டும் என்ற கனவு பெரும் இலக்காகவிருந்தது. அதற்கு முதல் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தத் திட்டமிட்டான். மழை நீரை மட்டும் நம்பி நெற்செய்கையி லீடுபட்டு வருவதையும் அளவு கணக் கில்லாத மழைநீர் அவமே சமுத்தி ரத்தில் கலப்பதையும் கண்ணுற்றான்.

ஒரு துளிமழை நீராவது வீணே சமுத்திரத்தில் கலக்கவிடக் கூடாதென் பது அவன் இலட்சிய மாகியது. தக்கிண தேசத் தின் ஒரு முக்கிய ஆறான தெதுறு ஓயாவில் முதற் கட்டமாகச் சில நீர்ப்பா சனத் திட்டங்களை ஏற் படுத்தினான். அதேபோல நாடெங்கும் நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்தி நெல்வயல்களின் பரப் பினை அதிகரித்து நாட் டினை நெற்களஞ்சி ய மாக்கினான். பஸ்துன் கோறளையைத் தன் புதிய தலைநகரமாக மாற்றி அதற்கு பராக் கிரமபுரம் எனப் பெயரிட்டான்.

தக்கிணதேசத்தின் அதிபதியாக இருந்தபோது இராஜரட்டையின் ஆட்சியிலடங்கிய பராக்கிரம சமுத்திர வாவியைக் கட்டியதாகச் சூளவம்சம் குறிப்பிடுவது சாத்தியமன்று. அத னைப் பிற்காலத்திலேயே கட்டு வித்தான். எண்ணிக் கையில் 37 உக்கு மேற் பட்ட நீர்ப்பாசனக் குளங்களை இம்மன் னன் அமைப்பித்தான். "வதிவிடத்தினைச் சுற் றியுள்ள நிலம் கூட மனிதனுக்குப் பயன் தராது வீணே கிடைக் கக்கூடாது" என்பது அவன் இலக்காகும். இவ்வாறு தன் நாட் டின் அபிவிருத்தியை முதல் நோக்காகக் கொண்டு வெற்றி பெற்றான். அனைத்து மாவட்ட நிர்வாகி களுக்கும் நாட்டின்



பராக்கிரமபாகு மன்னன் பயன்படுத்திய நீர்த்தடாகம்

அபிவிருத்தி, மத விருத்தி என்பனவற் றைக் கவனிப்பதோடு இளைஞர் களுக்குப் போர்ப்பயிற்சி வழங்குமாறு கட்டளை பிறப்பித்தான்.

முதலாவதாக தமிழ்படைகளுக்குத் தளபதியும், குருவக்கப் பிரதேசத்தில் வசிப்பவனுமான மலையராஜாவை அழைத்துப் போர்வீரர்களை ஒருங்கி ணைத்துத் தயார்நிலையில் இருக்கு மாறு கட்டளையிட்டான். நாட்டின் எல்லைப் புறங்களில் பணியில் ஈடுபட்டிருந்த படைத்தளபதிகளையும் தயார்ப்படுத்தி வைத்தான். உண் ணாட்டு மாவட்டங்களை நிர்வகிக்கும் பன்னிரண்டு தலைவர்களும் தயார்ப் படுத்தப்பட்டனர். மௌரியப்பிரதேசத் தில் வசிப்பவர்களான லம்பகர்ண இனத்தைச்சேர்ந்த லங்கா மஹாலானா, சிக்கநாயக்கா, ஜயமஹாலானா, சேத்தி நாயக்கா, மஹிந்தன் ஆகிய வீரர் களையும் தயார்நிலைப்படுத்தினான். கேரள வீரர்களும் ஆயிரக்கணக்கில் தயாராகினர். ஆயுதங்கள், குதிரைகள், யானைகள், தளபாடங்கள், தானியம், ஆடைகள் அனைத்தும் சேகரிக்கப் பட்டன. இராஜரட்டைமீது தாக்குதல் களுக்கு மன்னன் தயாராகினான்.

இராஜரட்டை மீது படையெடுப் பதற்கான ஆயத்தங்களைப் பராக்கி ரமபாகு செய்து முடித்தான். முதல்கட்ட மாக மலையதேசத்தைக் கைப்பற்ற முடிவுசெய்தான். மலையதேசத்தின் தும்பறை, ஜற்றிகண்டகாப் பிரதேசங் களுக்குப் பொறுப்பாக விளங்கிய கஜபாகுவின் தளபதியான றக்கா தண்டநாயக்கனைத் தன்வசப்படுத்திக் கொண்டான். இயற்கைப் பாதுகாப் பினைக் கொண்டிருந்த மலையதேசத் தைத் தண்டநாயக்கன் பராக்கிரம பாகுவுக்குக் கையளித்தமையைத் தெரிந்து கொண்ட மக்களும் புரட்சிக் காரரும் தண்டநாயக்கன் திரும்பி வந்ததும் கொலைசெய்துவிட முடிவு செய்தனர். அதனைக் கேள்விப்பட்ட தண்டநாயக்கன் அப்புரட்சிக்காரரைக் கைப்பற்றி அழித்தான். மலைய தேசத்தின் ஏனைய பகுதிகளையும் கைப்பற்றி பராக்கிரமபாகுவிடம் அளித்தான். அவ்வாறு மலைய பிரதேசத்தைப் பகுதிபகுதியாகத் தன் வசப்படுத்திக் கொண்டான். அதனை அடுத்து இராஜரட்டையைத் தன் ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவருவது அவன் முக்கிய நோக்கமாகியது. அதற்கான திட்டங்களைப் பராக்கிரம பாகு வகுத்தான்.

அதன்பின்னர் றக்காதண்டநாயக் கனுக்கு கேசதாது என்ற உயர்படை அந்தஸ்த்தும் செல்வங்களும் வழங்கி கஜபாகுவின் இராச்சியத்திலுள்ள மஜ்ஹிமா வக்ககா என்ற பிரதேசத் தைக் கைப்பற்றுமாறு அனுப்பி வைத்தான். அதன்படி நிலகிரிக்குச் சென்ற றக்கதண்டநாயக்கன் அப்பிர தேசத்தைக் கைப்பற்றினான். இதனைக் கேள்விப்பட்ட கஜபாகு பெரும் சைனியம் ஒன்றினை அவ்விடத்துக்கு உடன் அனுப்பி வைத்தான். அப்படை றக்கதண்டநாயக்கனால் முறியடிக்கப் பட்டது. இவ்வாறு மலையதேசம் பராக்கிரமபாகுவின் ஆதிக்கத்தினுள் வந்தடைந்தது.

தன் படைகளை இரண்டு பிரிவு களாக வகுத்து ஒன்றைக் கரை யோரமாக முத்துத்தளங்களை நோக்கி அனுப்பி வைத்தான். மற்றைய படைப்பிரிவை உண்ணாட் டினூடாகக் காலவாவியை நோக்கி முன்னேறச் செய்தான். காலவாவிப் பிரதேசத்தில் கஜபாகுவின் வலிமை மிக்க தளபதியாக கோகன்னநாயக்க நகரகிரி என்பவன் விளங்கினான். அவனது படையை பராக்கிரமபாகு வின் தளபதி றக்காதிவண்ணன் என்பவன் தன் பெரும் படையெடுப் பில் கோனாகமுகா என்றவிடத்தில் தோல்வி காண வைத்தான். இத் தோல்வியால் வெட்கமடைந்த கஜபாகுவின் தளபதி மீண்டும் சேனாவீரர்களைத் திரட்டிக்கொண்டு, தாக்குதலை மேற்கொண்டான். வெற்றியடைய முடியவில்லை. காலவாவிக் கோட்டை பராக்கிரம பாகு வசம் வீழ்ந்தது. அத்துடன் ஜனபதவின் சூரஅம்பாவன, லங்கா கிரியின் போதிகமம் ஆகிய பிரதேசங் களும் பராக்கிரமபாகுவின் வசமா யின. பின்னர் மகிந்தன், நகரகிரி ஆகிய தளபதிகளை மலாவலன நாட்டினைக் கைப்பற்றுமாறு படை யோடு அனுப்பி வைத்தான். இவ் வீரர்கள் மன்னனின் கோரிக்கையை நிறைவேற்றினர்.



பராக்கிரமபாகு மன்னன் காலத்து மரச்சிற்பம்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பை கட்சியாக பதிவதால் எக்கட்சிக்கும் அழிவு ஏற்படாது

## சுரேஷ் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

**தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை உத்தியோகபூர்வ கட்சியாகப் பதிவதன் மூலம் தந்தை செல்வாவினால் ஸ்தாபிக்கப்பட்ட தமிழரசுக்கட்சிக்கோ அல்லது வேறெந்தக் கட்சிக்கோ அழிவு ஏற்படுமென்று யாரும் அஞ்ச வேண்டிய அவசியமில்லை என்று யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**

'தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பதிவு தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்வதன்மூலம் ஏனைய கட்சிகளின் வரலாறும் தனித்துவமும் மறைந்து விடுமென எவரும் பயங்கொள்ள வேண்டிய அவசியமில்லை. ஒவ்வொரு கட்சிக்கும் அதற்கு அதற்குரிய தனித்துவமும் வரலாறுமுண்டு.

அது தொடர்ந்து காப்பாற்றப்படுமென்ற நிபந்தனைக்கு அமையவே கூட்டமைப்பை பதிவு செய்ய வேண்டுமெனக்கோரி வருகிறோம். ஏலவே கூட்டமைப்பின் தலைவராக இருக்கும் இரா.சம்பந்தன் தொடர்ந்தும் தலைவராக இருக்க வேண்டுமென்பதில் எங்களுக்குள் எந்த கருத்து வேறுபாடுமில்லை.

கூட்டமைப்புக்குள் காணப்படும் உள் முரண்பாடுகள் பேசித் தீர்க்கக்கூடியவை. அதற்கான கட்டமைப்பு இன்று இல்லையென்பதே பலவீனமாகவுள்ளது. குறிப்பாகச் சொல்லப் போனால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குள் சரியான கட்டமைப்பு இல்லையென்பது வெளிப்படையான உண்மை. அதற்கென ஒரு உயர் மட்டக்குழுவோ அல்லது நிதிக் குழுவோ அல்லது பிரதேச கிராமியக் குழுக்களோ இல்லாத நிலையில் பேசுவதற்கான சந்தர்ப்பங்களோ முடிவு எடுக்கும் அதிகாரமோ யாரிடம் உள்ளது, எவரிடம் இருக்கிறது எனத்தேட வேண்டியுள்ளது.

எனவேதான் ஒவ்வொருவரும் தாம் தாம் முடிவு எடுக்கும் போக்கு காணப்படுகிறது. உதாரணத்துக்கு கூறப்போனால் மக்கள் போராட்டமொன்றை நடத்தப் போகும் பட்சத்தில் ஒவ்வொருவரும் தாம் நினைத்த போக்கில் கருத்துக்களை கூறி விடுவதனால் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டு விடுகின்றன.

ஒரு ஒருமித்த வடிவம் இல்லாத நிலையில் பல்வேறுபட்ட விடயத்தை பல்வேறு உறுப்பினர்கள் பல்வேறு கோணங்களில் நின்று பேசி வருவதனால் பல பிரச்சினைகளும் கருத்து முரண்பாடுகளும் ஏற்பட்டு வருகின்றன. ஆகவே, சரியாக கட்டமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டும். அதற்கு முன்னோடியாக கூட்டமைப்பு பதிவு செய்யப்பட வேண்டுமென்று கோரி வருகின்றோம்.

தமிழர் பிரச்சினைகளை சர்வதேச மேடைக்கு கொண்டு சென்ற பெருமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தது என்பதை யாராலும் மறுக்க முடியாத உண்மை. இதன் பின்னணியில் இயக்கங்களே அதாவது விடுதலை அமைப்புக்களே இருந்துள்ளன என்பது உண்மை. அவை செய்த தியாகங்களும் உழைப்புக்களுமே உலக அரங்குக்கு எமது பிரச்சினைகளைக் கொண்டு சென்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை அழைத்து இந்தியா இன்று பேசுகின்றதென்றால் அமெரிக்கா கலந்துரையாடுகிறதென்றால் அதற்கு மூல காரணமாக இருப்பவர்கள் விடுதலை அமைப்புக்களே!

இன்று எஞ்சியுள்ள ஒரேயொரு ஆயுதம் மக்கள் ஆதரவாகும். நாம் பல கோணங்களில் நின்று கொள்வோமானால் அவர்களது ஆதரவை எம்மால் தக்க வைக்க முடியாது. அவர்களது பலத்தையும் ஆதரவையும் இழந்து விடக்கூடிய நிலை உருவாகி விடும். எனவே தான் சரியான செயற்றிட்டத்தின் கீழ் ஒரே அமைப்பாக செயற்பட கூட்டமைப்பு கட்சியாக மாறுவதன் மூலமும் பதிவு செய்வதன் மூலமே வெற்றி கொள்ள முடியும் என்றார். (அ-2)

# ஸ்ரீலங்கா எயார் லைன்ஸிற்கு 17 பில்லியன் ரூபா நட்டம்

இலங்கை விமான சேவையான ஸ்ரீலங்கா எயார் லைன்ஸ் 2011 தொடக்கம் 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 17 பில்லியன் ரூபாய் நட்டமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் விலையேற்றம் காரணமாகவே இந்த நட்டம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் 2010 தொடக்கம் 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியை காட்டிலும் இந்த நட்டத்தொகை குறைவு என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த காலப்பகுதியில் ஸ்ரீலங்கா எயார் லைன்ஸ் 17.60 பில்லியன் ரூபாய் நட்டமடைந்திருந்தது. இந்த நிலையில் கடந்த 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஸ்ரீலங்கா எயார் லைன்ஸின் வருமானம் ஏனைய ஆண்டுகளை காட்டிலும் குறிப்பிடத்தக்க அளவில் 18 வீதமாக அதிகரித்திருந்தது. (அ-2)



மு/திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்தில் கடந்த 5 ஆம் திகதி ஆசிரியர்தின விழா நிகழ்வுகள் நடைபெற்றன. இந்நிகழ்வில் திருமுறிகண்டிப் பிள்ளையார் ஆலயத்தில் ஆலய வழிபாடுகளை நிறைவு செய்து மலர்மாலை அணிவித்து அதிபர், ஆசிரியர்கள் அழைத்து வரப்படுவதைப் படத்தில் காணலாம்.

# உணவு விஷமானதால் 130 பணிப்பெண்கள் பாதிப்பு

## ஜோர்தானில் சம்பவம்

(கொழும்பு)

ஜோர்தானில் பணிப்பெண்களாக கடமையாற்றும் இலங்கைப் பெண்கள் 130 பேர் உணவு விஷமானதால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவம் தொடர்பில் கேர்ணல் பரீட் அல் ஷாரா தெரிவிக்கையில், ஹோட்டல் ஒன்றில் உணவருந்திய 130 பணிப்பெண்கள் வயிற்றுக் கோளாறால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் அம்மானில் உள்ள 3 மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். பாதிக்கப்பட்டவர்களின் நிலைமை தற்சமயம் தேறி வருகிறது.

சிகிச்சையின் பின்னர் இவர்களை மீண்டும் வேலையில் சேர்த்துக்கொள்வதா அல்லது பாதுகாப்பாக இலங்கைக்கு அனுப்புவதா என்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். (அ-2)

# டாக்காவில் உள்ள இலங்கை தூதரகத்திற்கு பாதுகாப்பு

(கொழும்பு)

டாக்காவில் அமைந்துள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் உள்ளிட்ட இலங்கைக்கு சொந்தமான நிறுவனங்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக பங்களாதேஷுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

பாதுகாப்பின் நிமித்தம் பங்களாதேஷ் பொலிஸார் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக அந்நாட்டுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் சரத் வேரகொட தெரிவித்துள்ளார்.

கடந்த 29 ஆம் திகதி பங்களாதேஷிலுள்ள விகாரைகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதை அடுத்து அந்த நாட்டு அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

அத்துடன் பங்களாதேஷில் வாழும் இலங்கையர்களின் பாதுகாப்புக்கான ஆலோசனைகள் விடுக்கப்பட்டுள்ளதாகவும் சரத் வேரகொட தெரிவித்துள்ளார். (அ-2)

# நாட்டு மக்களின் ஏக உரிமைகளை நசுக்க ஒருவருக்கும் உரிமையில்லை

## ஜனாதிபதி தெரிவிப்பு

(இரத்தினபுரி)

மக்களின் ஏக உரிமைகளை நசுக்குவதற்கு அல்லது பறித்தெடுப்பதற்கு எவருக்குமே உரிமை கிடையாதென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சப்ரகமுவ மாகாண சபைக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இரத்தினபுரி மாவட்ட அபிவிருத்தி மீளாய்வு கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இந்த விடயங்களைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அபிவிருத்தித் திட்டங்களில் அனைத்து தரப்பினதும் இணக்கத்துடன் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

இதன்போது தத்தமது பொறுப்புக்களில் இருந்து விலகி செயற்பட எவராலும் முடியாது. அரசியல்வாதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் உரியவாறு நிறைவேற்றப்படாத பட்சத்தில் அதன் பிரதிபலனாக பெரும்பாலான மக்களின் நலன்களுக்காக அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் செயலிழக்கக்கூடும்.

இவ்வாறான ஒரு நிலைமையை நாட்டினுள் தோற்றுவிப்பதற்காக எவருக்குமே உரிமை கிடையாதென அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# ஊடகப் பேச்சாளர் பதவியில் மாற்றம்

புதிய பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஒருவரை நியமிப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாக பொலிஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதுவரை காலம் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பதவியை வகித்து வந்த அஜித் ரோஹனவிற்கு பதிலாக வேறு ஓர் அதிகாரியை நியமிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

சிலகாலம் ஐக்கிய நாடுகள் அமைதி காக்கும் படையில் கடமையாற்றி நாடு திரும்பியுள்ள சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரசாந்த ஜயகொடியை மீளவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பதவிக்கு நியமிக்க திட்டமிடப்பட்டுள்ளது. தற்போதைய பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹனவை அம்பாறை பிராந்தியத்திற்கு பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகராக நியமிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் மோதலை ஏற்படுத்த இனவாத சக்திகள் முனைகின்றன

## அமைச்சர் விமல் குற்றச்சாட்டு

(கொழும்பு)

**நாட்டை ஸ்திரமற்ற நிலைமைக்குள் தள்ள, நிறைவேற்று அதிகாரம், நாடாளுமன்றம் மற்றும் நீதிமன்றம் இடையில் மோதலை உருவாக்கும் வேலைத்திட்டம் ஒன்று மிகவும் சூட்சுமமான முறையில் செயற்படுத்தப்பட்டு வருவதாகவும் இதில் மேற்குலக சக்திகள் சில தூதரகங்கள் மற்றும் சில இனவாத சக்திகள் இணைந்து செயற்பட்டு வருவதாக அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.**

குருநாகல் மாவத்தகம பிரதேசத்தில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பயங்கரவாதத்தில் இருந்து முற்றாக விடுவிக்கப்பட்ட நாடு கௌரவமான சமாதானத்தை நோக்கி பயணித்து வருகிறது. இந்த பயணத்தை தடுக்க மேற்குலக சக்தி, பிரிவினைவாத அமைப்புகள், எதிர்க்கட்சிகள் பலத்த முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

அவர்கள் ஆரம்பித்துள்ள புதிய சூழ்ச்சியானது நாட்டின் நிறைவேற்று அதிகாரம், நாடாளுமன்றம், நீதிமன்றம் இடையில் மோதலை உருவாக்கி நாட்டை ஸ்திரமற்ற நிலைக்குள் தள்ளுவதாகும். திவிநெகும மூலம் நாட்டில் அரசியல் ரீதியான ஸ்திரமற்ற நிலையை ஏற்படுத்த தமிழ்த்தேசிய கூட்டமைப்பு முயற்சித்து வருகிறது.

அரசாங்கத்திற்கு நாடாளுமன்றத்தில் தெளிவான மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் உள்ளது. எனினும் 13 ஆவது அரசியல் அமைப்பு திருத்தத்தின் நிறுவனப்பட்டியலில் உள்ள விடயங்கள் குறித்து நாடாளுமன்றத்தில் சட்டமூலங்கள் கொண்டு வரப்பட வேண்டுமாயின் அதற்கு மாகாண சபைகளின் அங்கீகாரத்தை பெற வேண்டும்.

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் இருக்கின்ற போதிலும் அரசாங்கம் என்ற வகையில் மக்களின் பலத்திற்கு மதிப்பளித்து திவிநெகும திட்டத்திற்கு அங்கீகாரம் பெறுவதற்காக அரசாங்கம் அதனை மாகாண சபைகளில் சமர்ப்பித்தது. மாகாண சபைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆனால் வடமாகாணம் ஸ்தாபிக்கப்படாத நிலையில் இதனால் அந்த மாகாண ஆளுநரின் ஆட்சியின் கீழ் உள்ளது. இவ்வாறான நிலையில் திவிநெகும தொடர்பான மாகாணத்தின் நிலைப்பாட்டை தீர்மானிக்க வேண்டியவர் ஆளுநர். மாகாணசபை இயங்காத நேரத்தில் அந்த மாகாணத்தின் அதிகாரங்கள் ஆளுநருக்கு வழங்கப்படுகின்றன.

எனினும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நீதிமன்றத்திற்கு சென்றுள்ளது. ஆளுநரின் தீர்மானம் மாகாண சபையின் தீர்மானமா என்பது குறித்து கூட்டமைப்பு நீதிமன்றத்தில் விளக்கம் கேட்டுள்ளது. நீதிமன்றம் எப்படியான தீர்ப்பை வழங்கினாலும் அதனை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஒருவேளை வடமாகாணசபை ஸ்தாபிக்கப்படும் வரை திவிநெகும சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முடியாது போனால் நாட்டில் பாரிய சீர்குலைவு ஏற்படக்கூடும்.

இப்படியான நிலைமையை ஏற்படுத்த பிரிவினைவாத சக்திகள், சில மேற்குலக தூதரக அதிகாரிகள் கடும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். நாட்டில் சீர்குலைவை ஏற்படுத்தி நாட்டை அரசியல் ஸ்திரமற்ற நிலைமைக்கு கொண்டு செல்ல வேண்டும் என்பதே அவர்களின் நோக்கம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## சிறுவர் உரிமைகளை பாதுகாத்தல் தொடர்பான விசேட பயிற்சிகள்

சிறுவர்களின் உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தல் தொடர்பில் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான விசேட பயிற்சிகளை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இது தொடர்பிலான மூன்று நாட்கள் கொண்ட கருத்தரங்கு நேற்று முன்தினம் ஆரம்பமான தாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் தெரிவிக்கின்றது.

சகல மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 30 இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த கருத்தரங்கில் பங்கேற்கவுள்ளனர்.

சிறுவர் உரிமைகளை பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் இளைஞர்களால் நிறைவேற்றவேண்டிய பொறுப்புகள் மற்றும் கடமைகள் குறித்து இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அடிப்படை புரிந்துணர்வை பெற்றுக்கொடுப்பது இதன் நோக்கமாக அமைந்துள்ளது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், இளைஞர் விவகார மற்றும் திறன் விருத்தி அமைச்சு ஆகியன கூட்டாக ஏற்பாடு செய்துள்ள கருத்தரங்கு இன்றையதினம் நிறைவடையும். (அ-2)

## சிறுவர் துஷ்பிரயோக அதிகரிப்பு கவலை தருகின்றது-பிரபா எம்.பி.

(கொழும்பு)

நாட்டில் சிறுவர் துஷ்பிரயோகம் கடந்த சில வருடங்களாக அதிகரித்து வருவது கவலைக்குரிய விடயமாகும் என ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

பம்பலப்பிட்டி இந்து கல்லூரியில் நடைபெற்ற சிறுவர் தின நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

யுத்தம் நடைபெற்ற காலத்தை விட இப்பொழுது அதிகமாக இடம்பெற்று வருவதை அன்றாடம் நாம் கேட்கக் கூடியதாக உள்ளது.

இவ்விடயம் விசேடமாக ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டு அவரது ஆலோனைக்கமைய பாராளுமன்றத்தில் புதிய சட்டங்கள் நிறைவேற்றப்படவுள்ளன.

சிறுவர்களின் எதிர்காலம் பிரகாசமாக நிலவுவதற்கு அரசாங்கம் முழுமையான முறையில் இவ்விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (அ-2)

## அமைக்கப்படவுள்ள பொறியியல் பீடங்களுக்கு வெளிநாட்டு பேராசிரியர்கள்?

(கொழும்பு)

இலங்கை பல்கலைக்கழகங்களில் வெளிநாட்டு பேராசிரியர்களை கடமையில் ஈடுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

உத்தேசிக்கப்பட்டுள்ள இரண்டு பொறியியல்பீடங்களுக்கு வெளிநாட்டு பேராசிரியர்களின் சேவை பெற்றுக்கொள்ளப்படவுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் காமினி சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழகத்தில் இந்த உத்தேச பொறியியல் பீடங்கள் அமைக்கப்படவுள்ளன. இந்த இரண்டு பீடங்களிலும் இந்திய பேராசிரியர்களை கடமையில் ஈடுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

புதிய பீடங்கள் ஆரம்பிக்கப்படும் காலப்பகுதியில் உடனடியாக பேராசிரியர்களை கடமையில் ஈடுபடுத்த முடியாத காரணத்தினால் இவ்வாறு வெளிநாட்டு பேராசிரியர்களின் சேவை பெற்றுக் கொள்ளப்படவுள்ளது.

எவ்வாறெனினும் வெளிநாட்டு பேராசிரியர்களை கடமையில் ஈடுபடுத்தும் அதிகாரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு கிடையாது என தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

## திவிநெகுமவை அமுல்படுத்துவதில் அவசரம் வேண்டாம் - ஜனாதிபதி

(கொழும்பு)



திவிநெகும சட்டத்தை அவசர அவசரமாக அமுல்படுத்த வேண்டாம் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சாதாரண சட்டமொன்றை நிறைவேற்றுவதனை போன்று இந்தச் சட்டத்தையும் நிறைவேற்றவும் அவசர சட்டமாக நிறைவேற்றப் போனால் இல்லாத பிரச்சினைகள் ஏற்படும்.

சட்டத்தை ஏன் அவசரமாக நிறைவேற்றுகின்றார்கள் என மக்கள் கேள்வி எழுப்பக் கூடும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

திவிநெகும சட்டம் நிறைவேற்றுவது தொடர்பில் அமைச்சரவை கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்ட போது உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க குறித்த சட்டத்தை அவசரமாக அமுல்படுத்த வேண்டுமென கோரியிருந்தார்.


எனினும் இவ்வாறு அவசரமாக அமுல்படுத்த வேண்டிய அவசியமில்லை என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (அ-2)


இறுப்பிட்டி சனசமூக நிலையத்தின் வாழ்வாதார உதவித்திட்டத்தின் கீழ் வறிய மக்களுக்கு உதவிப்பொருட்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பயனாளிகளுக்கு உதவிப்பொருட்கள் வழங்கப்படுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# த.தே.கூட்டமைப்பிற்கு புதுடெல்லி அழைப்பு!



# அழுத்தம் யாருக்கு இலங்கைக்கா..? தமிழர்தரப்புக்கா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு புதுடெல்லி வருமாறு இந்தியா மீண்டும் அழைப்பு விடுத்துள்ளது. அடுத்த மாதம் 10 ஆம்திகதி புதுடெல்லிக்கு வருமாறு இந்திய வெளிவிவகார அமைச்சினூடாக அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இந்தப் பயணத்தின்போது பிரதமர் மன்மோகன்சிங் வெளிவிவகார அமைச்சர் உட்பட இந்தியத் தலைவர்கள் பலரையும் கூட்டமைப்புப் பிரதிநிதிகள் சந்திக்கவுள்தாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பயண நிகழ்ச்சி நிரல் இன்னமும் தயாராகவில்லை. ஆனால், புதுடெல்லிப் பயணம் உறுதியானது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்திப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் புதுடெல்லிக்கு பயணம் மேற்கொள்வது இதுதான் முதல் முறையல்ல. ஏற்கனவே மூன்று நான்கு தடவைகள் அவர்கள் புதுடெல்லி சென்று காத்திருந்தபோதும், அந்தக்கதவு திறக்கப்படாமல் திரும்பிவந்தனர். இம்முறை, முறையான உத்தரவாதத்துடன்தான் அவர்கள் புதுடெல்லி செல்வதாக நம்பப்படுகிறது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் இந்தியப்பயணம் இடம்பெற்ற சில நாட்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இது மிகவும் முக்கியமான விடயம்.

இந்தியப் பயணத்தின்போது தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வை விரைவாக காணவேண்டும் என்று பிரதமர் மன்மோகன்சிங் வலியுறுத்தியதாக புதுடெல்லி ஊடகங்கள் பலவும் செய்தி வெளியிட்டிருந்தன. ஆனால், பேச்சுக்கள் தொடர்பாக அதிகாரபூர்வமான அறிவிப்பு ஏதும் வெளியாகவில்லையென்பது இங்கு கவனிக்கத்தக்கது. இரு நாடுகளினதும் தலைவர்களினது முறைப்படியான அதிகாரபூர்வ சந்திப்புகள் இடம்பெற்றபோதும் இச்சந்திப்பின் கூட்டறிக்கையோ அல்லது அதிகாரபூர்வ செய்திக் குறிப்போ வெளியிடப்படவில்லை. பொதுப்படையான தகவல்களே வெளியிடப்பட்டன. நிரந்தர அமைதிக்கான அரசியல் தீர்வை விரைவாகக் காணவேண்டும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடம் வலியுறுத்தப்பட்டதாகவும் தமிழத் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுக்களை விரைந்து தொடங்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

அதிகாரபூர்வமாக வெளியிடப்படாத இந்தத் தகவல்கள் எந்தளவுக்கு வலுவானவை என்று உறுதியாகக் கூற முடியாது.

எவ்வாறயினும் இந்தச் சந்திப்பு ஒரு அழுத்தம்மிக்க சூழலில் இடம்பெற்றது என்பதை உணர முடிகிறது.

அத்தகைய சூழலில்தான் பொதுவாக கூட்டறிக்கைகள் வெளியிடப்படுவதில்லை.

இணக்கப்பாடுகள் எட்டப்படாத நிலையில் அல்லது எடுக்கப்பட்ட இணக்கப்பாடுகளை வெளிப்படுத்த விரும்பாத நிலையில்தான் இருதரப்பும் சந்தித்துவிட்டு தம்பாட்டில் நடையைக் கட்டி விடுவதுண்டு. இவ்வாறுதான் புதுடெல்லியிலும் நடந்துள்ளது போலுள்ளது. ஆனால், ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் பயணத்தை அடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இந்தியாவில் இருந்து உடனடியாக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதை சாதாரணமானதொரு விடயமாக கருத முடியாது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் தடைப்பட்டுப் போயுள்ள அரசியல் பேச்சுக்களை மீளத் தொடங்க வேண்டும் என்பதே இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளின் நிலைப்பாடாக உள்ளது. இத்தகைய நிலையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு இந்தியா அழுத்தம் கொடுத்து பேச்சுக்களை ஆரம்பிக்க முனையப்போகிறதா அல்லது இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்து பேச்சுக்களைத் தொடரவைக்க முனையப் போகிறதா என்பதுதான் முக்கியமான கேள்வியாக உள்ளது. இணக்கம் காணப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்தினால் பேச்சுக்களை மீளத் தொடங்கலாம் என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு.

ஆனால், தெரிவுக்குழுவுக்கு வந்தால் தான் எதைப் பற்றியும் பேசமுடியும் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடு.

அண்மையில் ஜனாதிபதியை சந்தித்தபோது வடக்கு கிழக்கில் மாகாண ஆளுநர்கள் மற்றும் மாவட்ட அரச அதிபர்களாக சிவில் அதிகாரிகளை நியமிக்குமாறு கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கோரியிருந்தார். அதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கொடுத்த பதில், தெரிவுக் குழுவுக்கு வாருங்கள் அது பற்றிப் பேசலாம் என்பதேயாகும். அதாவது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எந்த விடயத்தை முன்வைப்பதானாலும் அதை தெரிவுக்குழுவில்தான் வைக்க வேண்டும் என்பதே அரசின் நிலைப்பாடு. அதற்கு வெளியே அவர்களின் கருத்துக்களைக் கேட்க அரசாங்கம் தயாரில்லை. எப்படியாவது கூட்டமைப்பை தெரிவுக்குழுவுக்குள் கொண்டுவந்துவிட வேண்டும் என்பதற்காகவே அரசாங்கம் இப்படி முரண்டு பிடிப்பதாகத் தெரிகிறது. ஏனென்றால் கூட்டமைப்பு பங்கேற்காமல் தெரிவுக்குழுவைக் கூட்ட முடியாது. இதனால், அரசின் நகர்வுகள் அத்தனையும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளன.

தெரிவுக்குழுவுக்குள் கூட்டமைப்பைக் கொண்டுவரும் காரியத்தைதான் இந்தியா இப்போது மேற்கொள்ளப்பேகிறதா அல்லது. இலங்கை அரசை வழிக்குக் கொண்டுவர முயற்சிக்கப்போகிறதா என்பது முக்கியமான கேள்வியாக உள்ளது. தெரிவுக்குழுவில் பங்கேற்கும்படி கூட்டமைப்புக்கு இந்தியா ஏற்கனவே பலமுறை அழுத்தம் கொடுத்திருப்பினும் இம்முறை அது மன்மோகன்சிங் ஊடாகக் கொடுக்கப்படலாம் என்று தெரிகிறது. புதுடெல்லி செல்லும் கூட்டமைப்பு குழுவை மன்மோகன்சிங் சந்திக்கலாம்.

ஆனால், வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா சந்திப்பாரா என்பது சந்தேகம்தான். ஏனென்றால் விரைவில் நடக்கவுள்ள அமைச்சரவை மாற்றத்தில் எஸ்.எம். கிருஸ்ணாவின் பதவி பறிபோகலாம் என்ற நிலையே உள்ளது. அவருக்குப் பதிலாக ஆனந்த சர்மா அல்லது வேறு எவரேனும் ஒருவர் வெளிவிவகார அமைச்சைப் பொறுப்பேற்கலாம் என்று கூறப்படுகிறது. அதேவேளை மன்மோகன்சிங் தலைமையிலான மத்திய அரசின் பிடியும் ஆட்டம் காணத் தொடங்கிவிட்டது. இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு அது தாக்குப்பிடிக்காது என்றே பரவலாகக் கருதப்படுகிறது. இதனால், விரைவில் நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ள இந்தியா தயாராகிவரும் நிலையில் இலங்கைப் பிரச்சினையின் பாதிப்புகளில் இருந்து மத்தியில், ஆட்சியில் உள்ள காங்கிரஸ் கட்சி தப்பிக் கொள்வதற்கு கூடுதல் கவனம் செலுத்தும். இதனால், இம்முறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் புதுடெல்லியில் காக்க வைத்து ஏமாற்றப்பட வாய்ப்பில்லை என்றே நம்பலாம்.

தமிழ்நாடு, புதுவையில் உள்ள 40 தொகுதிகளிலும் வாக்காளர்களை வசப்படுத்த இலங்கை விவகாரத்தில் நல்லதொரு பெயரை எடுக்க வேண்டிய தேவை காங்கிரஸுக்கு உள்ளது. இதனால், புதுடெல்லியின் நகர்வுகள், தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு அதிக அழுத்தங்களைக் கொடுத்து வளைத்துப் பார்க்கும் அளவுக்கு தீவிரமானதாக இருக்காது என்ற கருத்தும் உள்ளது. எவ்வாறாயினும் புதுடெல்லியின் இந்த அழைப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கான இன்னொரு அங்கீகாரமாகக் கருதலாம். ஏற்கனவே அமெரிக்காவின் அழைப்பு, தென்னாபிரிக்காவின் அழைப்பு என்பன தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு உள்ள சர்வதேச அடையாத்தை தெளிவாகவே காட்டியது. இப்போது மன்மோகன் சிங்குடனான சந்திப்பு இடம்பெற்றால்-அதன் விளைவுகள் என்னவாக இருந்தாலும்கூட, அது தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கான வலுவான அங்கீகாரத்தைக் கொடுக்கும்.

அது ஒருவகையில் இலங்கை அரசுக்கு கடுப்பான செய்தியாகவே அமையும். எனவே இலங்கை அரசு இந்த அழைப்பை விருப்போடு வரவேற்க வாய்ப்பில்லை.

தொல்காப்பியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






சர்வதேச முதியோர் வார நிகழ்வுகளின் போது கிளி/சிவநகர் கிராம மூத்த பிரஜைகள் கௌரவிப்பு நிகழ்வு கடந்த 3 ஆம் திகதிசிவநகர் அ.த.க.பாடசாலையில் நடைபெற்றது. இந்நிகழ்வின் விருந்தினர்களுடன் மூத்த பிரஜைகள் ஒன்றிணைந்து நிற்பதை படங்களில் காணலாம். (படங்கள்:- சிவநகர் செய்தியாளர்)

# திவிநெகும சட்டத்தை ஆதரித்து எதை சாதிக்கப் போகிறார்கள்?

## மு.கா.பிரதிச் செயலாளர் காரியப்பர் கேள்வி

(கல்முனை)

திவிநெகும சட்டமூலத்திற்கு கிழக்கு மாகாண சபையின் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் தன்னிச்சையாக ஆதரவு அளித்துள்ளதையடுத்து அக்கட்சியின் உயர்பீட உறுப்பினர்களிடையே எழுந்துள்ள முரண்பாடுகள் காரணமாக முஸ்லிம் காங்கிரசின் முக்கிய பதவியில் உள்ள ஒருவர் தமது பதவியை இராஜினாமா செய்வது பற்றி ஆலோசித்து வருவதாக அக்கட்சியின் உயர் பீட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

தமிழ்பேசும் மக்களுக்குக் கூடிய அதிகாரப் பரவலாக்கல் வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகவும் எதிர்பார்ப்பாகவும் உள்ளது. இவ்வாறான நிலையில் மாகாண சபைகளுக்குள்ள சொற்ப அதிகாரங்களையும் மத்திய அரசுக்கு தாரை வார்த்து வழங்கி விட்டு கிழக்கு மாகாணத்தில் எதைச் சாதிக்கப் போகிறார்கள்? என முஸ்லிம் காங்கிரசின் பிரதி செயலாளரும் கல்முனை மாநகர சபையின் பிரதி மேயருமான சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் கேள்வியெழுப்பினார்.

அவர் மேலும் கூறுகையில், 13 ஆம் அரசியலமைப்பு திருத்தச்சட்டத்தை தூக்கி எறிந்து விட்டு எம்மால் செயற்படமுடியாது. திவிநெகும சட்டமூலமானது மிகவும் பாரதூரமானதும் அபாயகரமானதுமான ஒன்று. ஆகையால் இந்த சட்டமூலத்தின் எதிர் விளைவுகள் தொடர்பாக வெகுவிரைவில் கூடி ஆராய்ந்து செயற்பட வேண்டும். ஏற்கனவே கிழக்கு மாகாணத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் இணைந்து ஆட்சியமைத்தது தொடர்பில் கட்சிக்குள் பாரிய கருத்து முரண்பாடுகளும் முறுகல் நிலையும் ஏற்பட்டிருந்தது.

அதாவது கிழக்கில் அரசுடன் சேர்ந்து ஆட்சியமைப்பதானது சிக்கல்களை ஏற்படுத்தும் ஆகையால் கட்சியின் அரசியல் உயர் பீடத்தில் ஆராய்ந்து முடிவெடுப்போம் என்ற நிலையில் அவ் வாறு கூடி ஆராயாமல் தன்னிச்சையாக முடிவெடுத்து அரசுடன் இணைந்து ஆட்சி அமைக்கப்பட்டது. கிழக்கு முஸ்லிம் காங்கிரசிலிருந்து தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுடனும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் கூடி ஆராய்ந்தே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக கூறப்பட்டது.

இருந்தும் அந்த முடிவு தொடர்பான சர்ச்சை இன்னும் கட்சிக்குள் தொடர்ந்த வண்ணமேயுள்ளது. இவ்வாறான நிலையிலேயே கிழக்கு மாகாண சபையில் திவிநெகும சட்டமூலத்துக்கு ஆதரவாக முஸ்லிம் காங்கிரசின் உறுப்பினர்கள் வாக்களித்துள்ளனர்.

அவ்வாறான சிக்கல் நிலைமைகளையெல்லாம் நீக்கி கிழக்கில் ஆட்சி நடத்த வேண் டும். இவ்வாறான நிலையில் மத்திய அரசாங்கத்திடம் உள்ள சொற்ப அதிகாரங்களையும் தாரைவார்த்துள்ளமையானது தமிழ்பேசும் முழு சமூகத்தின் மத்தியிலும் பல்வேறு சந்தேகங்களையும் தோற்றுவித்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.(அ-2)

# தேர்தல்முறைமை மாற்றத்திற்கு தமிழ்க்கட்சிகள் எதிர்ப்பை வெளியிடும்?

(கொழும்பு)

தேர்தல் முறைமை மாற்றத்திற்கு எதிர்ப்பை வெளியிட தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் கட்சிகள் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளன. விருப்பு வாக்குமுறையை இல்லாதொழிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

முதல்கட்டமாக உள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முறைமையில் மாற்றம் கொண்டுவர அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இந்த யோசனைத்திட்டம் நாளை மறுதினம் புதன்கிழமை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த சட்டத்தினால் சிறுபான்மை கட்சிகளுக்கு பாதிப்பு ஏற்படக் கூடுமென கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் வாரம் நடைபெறவுள்ள கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இது குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது. (அ-2)

# திருக்குறள் தமிழ் இலக்கியத்திறன் பரீட்சையில் வெற்றி பெற்றோர் விபரம்

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கம் நடத்திய திருக்குறள் தமிழ் இலக்கியத்திறன் பரீட்சை முடிபுகளை தமிழ்ச்சங்கச் செயலாளர் இறைபிள்ளை அறிவித்துள்ளார்.

இப்போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு,

*பிரிவு அ*

மகேந்திரன் கிருத்திகா (உருத்திரபுரம் ம.வி.), மோகனதாசு பிருந்தா (உருத்திரபுரம் ம.வி.), ராயா பானுமதி (கிளி/மத்திய கல் லூரி).

*பிரிவு ஆ*

நகுலகுமார் சாமந்தி (திருவையாறு ம.வி.), கணேசன் அரிமர்த்தனா (புனித திரேசா பெண்கள் கல்லூரி), ரமணன் வினுசா (உருத்திரபுரம் ம.வி.).

*பிரிவு இ*

பாலகுமாரன் அட்சிகா (புனித திரேசா பெண்கள் கல்லூரி), கேதீசுவரன் திவாரகா (பளை மத்திய கல்லூரி),ஜெயக்குமார் கயானி (வட்டக்கச்சி ம.வி.), தங்கராசா ஜீவலோயினி (கிளி/இந்துக் கல்லூரி), நித்தியானந்தன் பிரசாந் (உருத்திரபுரம் ம.வி.).

*பிரிவு ஈ*

நகுலகுமார் அபிராமி (திருவையாறு ம.வி.), திருபானந்தன் ருசாந்தி (புனித பற்றிமா றோ. க.த.க.பா.), யோகநாதன் சதனிகா (உருத்திரபுரம் ம.வி.), புஸ்பராசா டனோயன் (கிளி/மத்திய கல்லூரி), ஜெயசீலன் துபாகரன் (கிளி/மத்திய கல்லூரி).

*பிரிவு உ*

பாலமுரளி சிறீதரன் (திருவையாறு ம.வி.), திவ்யகுமார் யேகன் (உருத்திரபுரம் ம.வி.), கேதீஸ்வரன் அபியுகா (திருவையாறு ம.வி.).

(அ-9-254)

# மரண அறிவித்தல்

## திருநாவுக்கரசு- நாகரத்தினம்

### (உரிமையாளர் -சாந்தி அச்சகம்)



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் நாச்சிமார் கோவிலடியை வதிவிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு-நாகரத்தினம் நேற்று (07.10.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு- செல்வநாயகி தம்பதியரின் அன்பு மகனும், தனலக்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கந்தையாபிள்ளை (ஸ்தாபகர், மில்க்வைற்), மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும், ரவிந்திராதேவி, சந்திராதேவி, சாந்தாதேவி, கங்காதேவி ஆகியோரின் பாசமிகு தந்தையும், வேலாயுதம் (பிரதி அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி), நந்தகோபால் (மில்கவைற்), தயாபரன் (தயா அச்சகம்), சிவன்ராஜ் (UK) ஆகியோரின் அன்பு மாமனும், Dr. சரவணன் பாமா (மாணவி, விவசாயபீடம், யாழ்ப்பாணம்), கோகுலன் (மாணவன், யாழ். இந்துக் கல்லூரி), ரமணன் (இலங்கை மின்சார சபை லிகிதர்), ரேகா (ஆசிரியர், பெரியபுலம் மகா வித்தியாலயம்), சிவதர்ஷன் (மாணவன், தொழில்நுட்பக் கல்லூரி), யதுர்ஷன் (மாணவன் , யாழ். இந்துக் கல்லூரி), குகதர்ஷன் (மாணவன், யாழ். இந்துக் கல்லூரி), சாரங்கன், சாம்பவி (UK) ஆகியோரின் அன்புப் பேரனும்,

காலஞ்சென்ற நாகேஸ்வரி, காலஞ்சென்ற மகேஸ்வரன், இசைஞானவதி (கொழும்பு), கதிர்காமநாதன் (பிரான்ஸ்), விக்கினேஸ்வரன் (கனடா), விக்னேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற விஜயசிங்கம், ராஜேஸ்வரி காலஞ்சென்ற நாகரத்தினம், காலஞ்சென்ற சரோஜினிதேவி, மதனாம்பிகை, ஈஸ்வரலிங்கம், காலஞ்சென்ற இரத்தினகோபால், காலஞ்சென்ற கனகராஜா (முன்னாள் மில்க்வைற் அதிபர்), லோகநாதன் பவநாதன், சபாரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (08.10.2012) திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

575,கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

(594)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

243

## பேயை ஏமாற்றிய குரங்குகள்

முன்னொரு காலத்தில் அடர்ந்த பெரியகாடு ஒன்று இருந்தது.

அந்தக்காட்டில் ஏராளமான குரங்குகள் வாழ்ந்து வந்தன.

அவற்றிற்குத் தலைவனாகக் குரங்கு ஒன்று இருந்தது. அது அறிவு நிறைந்ததாக விளங்கியது.

அந்தக்காட்டின் நடுவில் வற்றாக்குளம் ஒன்று இருந்தது.

அதில் தண்ணீர்ப்பேய் ஒன்று வாழ்ந்து வந்தது.

குளத்தில் யார் இறங்கினாலும் அவர்களைக் கொன்று தின்றது அது.

சில ஆண்டுகளாக அங்கே மழை பெய்யவில்லை, அதனால் கடுமையான வறட்சி தோன்றியது.

குரங்குகளுக்கு உணவும் தண்ணீரும் கிடைப்பது அரிதாயிற்று.

குரங்குகளின் தலைவன் எல்லாக் குரங்குகளையும் அழைத்தது.

நண்பர்களே! மழை இல்லாததால் கடுமையான பஞ்சம் நிலவுகிறது. உணவும் தண்ணீரும் தேடி நாம் வேறு இடம் செல்லவேண்டும். அப்பொழுது தான் நம்மால் உயிர்வாழ முடியும்.

இந்தக்காட்டில் உள்ள மரங்களில் சில நச்சு மரங்கள். அவற்றின் பழங்களை உண்டால் உடனே இறந்து விடுவோம்.

நீர்நிலைகள் சிலவற்றில் தண்ணீர்ப்பேய் உள்ளது. அதில் இறங்கினால் அந்தப் பேய் நம்மை விழுங்கிவிடும்.

பழக்கப்படாத மரமோ நீர்நிலையோ கண்ணில் பட்டால் என்னிடம் வாருங்கள். நான் அவற்றை ஆராய்ந்து சொல்கிறேன். பின்பு அந்தப் பழங்களை உண்ணலாம். தண்ணீரைக் குடிக்கலாம் என்றது.

அப்படியே செய்கிறோம் என்றன குரங்குகள். பின்பு அவை நாலாபக்கமும் சென்றன.

தண்ணீர்ப்பேய் இருக்கும் குளத்தைச் சில குரங்குகள் பார்த்தன. தண்ணீரைக் குடிக்காமல் தலைவனுக்காகக் காத்திருந்தன.

குரங்குகளின் தலைவன் அங்கு வந்தது. குளத்தின் கரைகளைச் சுற்றிச்சுற்றி வந்து பார்த்தது.

குளத்தை நோக்கிச் சென்ற காலடித்தடங்கள்



நிறையத் தெரிந்தன. குளத்திலிருந்து திரும்பிய காலடித் தடங்கள் ஏதும் தெரியவில்லை. உரத்த குரலில் அது நண்பர்களே என் பேச்சை மதித்து நடந்ததால் நீங்கள் உயிர் பிழைத்தீர்கள். இல்லையேல் இறந்திருப்பீர்கள்.

இந்தக்குளத்தில் தண்ணீர்ப்பேய் உள்ளது. இறங்குபவர்களை விழுங்கி விடுகிறது. அதனால் தான் குளத்தை நோக்கிச் சென்ற காலடித் தடங்கள் தெரிகின்றன. திரும்பிய காலடித்தடங்கள் ஏதும் தெரியவில்லை என்றது. அந்தக் குளத்திலிருந்த தண்ணீர்ப்பேய் குரங்குகளைப் பார்த்தது. அவை குளத்தில் இறங்கும் கொன்று தின்னலாம் என்று காத்திருந்தது.

நீண்டநேரமாகியும் அவை இறங்காததைக் கண்டு பொறுமை இழந்தது.

தண்ணீருக்கு மேலே வந்த அது குரங்குகளே! தண்ணீர் குடிக்காமல் ஏன் அங்கேயே நிற்கிறீர்கள்? குளத்தில் இறங்கித் தண்ணீரைக் குடியுங்கள். உங்கள் தாகத்தைப் போக்கிக் கொள்ளுங்கள் என்றது. பயங்கரமான அந்தப் பேயைக் கண்டு குரங்குகள் நடுங்கின.

குரங்குகளின் தலைவன் அந்தப் பேயைத் துணிவுடன் பார்த்தது. நீ தண்ணீர்ப் பேய்தானே.

குளத்தில் இறங்கும் எல்லோரையும் கொன்று தின்கின்றாய் அல்லவா? எங்களை ஏமாற்றமுடியாது. உண்மையைச் சொல் என்று கேட்டது.

இந்தக்குரங்குகள் உண்மையை அறிந்து கொண்டன. இவற்றால் நம்மிடமிருந்து தப்ப முடியாது என்று நினைத்து அந்தப் பேய்.

சிரித்த அது நீ சொல்வது உண்மைதான். தண்ணீர்ப் பேய்தான் நான். குளத்தில் யார் இறங்கினாலும் அவர்களைக் கொன்று தின்பேன்.

யானைகள் கூட்டம் கூட்டமாக வந்தாலும் என்னிடமிருந்து தப்பமுடியாது.

இந்தக்குளத்தை விட்டால் எங்குமே தண்ணீர் கிடையாது. நீங்கள் தாகத்தால் துடித்துச் சாகவேண்டும். அல்லது குளத்தில் இறங்கி எனக்கு உணவாக வேண்டும். இதைத்தவிர உங்களுக்கு வேறு வழியில்லை. தாகத்தால் சாகிறீர்களா? எனக்கு உணவாகிறீர்களா? என்றது. இதைக்கேட்ட குரங்குகளின் தலைவன் சிந்தனையில் ஆழ்ந்தது.

தண்ணீரும் குடிக்க வேண்டும். பேய்க்கும் உணவாகக் கூடாது. என்ன செய்வது? என்று சிந்தித்தது. அதன் அறிவிற்கு நல்ல வழி ஒன்று தோன்றியது.

தண்ணீர்ப்பேயே! தண்ணீருக்குள் தான் உனக்கு வலிமை. கரைக்கு வந்தால் உன்னால் ஒன்றும் செய்யமுடியாது. இது எங்களுக்குத் தெரியும். இந்தக் குளத்தின் தண்ணீரை நாங்கள் குடிக்கப் போகிறோம். உன்னால் எங்களை ஒன்றும் செய்ய முடியாது என்றது.

குளத்தில் இறங்காமல் எப்படித்தண்ணீர் குடிப்பீர்கள் என்று கேட்டது பேய்.

நீயே அதைப்பார்க்கப் போகிறாய் என்றது குரங்குகளின் தலைவன்.

பின்பு அது குரங்குகளைப் பார்த்து குளத்தின் கரையில் நிறைய நாணல்கள் வளர்ந்துள்ளன. ஆளுக்கொரு நாணலைப் பிடுங்குங்கள்.

கரையில் இருந்தபடியே அதன் ஒரு முனையைத் தண்ணீருக்குள் விடுங்கள். இன்னொரு முனையில் வாய் வைத்து உறிஞ்சுங்கள்.

வயிறு முட்டத் தண்ணீரைக் குடியுங்கள். இந்தப் பேயால் நம்மை ஒன்றும் செய்யமுடியாது என்று வழிமுறைகளைச் சொன்னது.

குரங்குகள் ஒவ்வொன்றும் நாணல் குழலைப் பிடுங்கின. கரையில் இருந்தபடியே அந்தக் குழல்களைத் தண்ணீருக்குள் விட்டன. வயிறு நிரம்பத் தண்ணீர் குடித்தன.

இதைப்பார்த்த பேய் திகைத்தது. அவற்றை ஒன்றும் செய்யமுடியாது என்பதை உணர்ந்தது.

ஏமாற்றம் அடைந்த அது தண்ணீருக்குள் மூழ்கி மறைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரும்பு அகழும் மக்கள் மீது படையினர் தாக்குதல்

## செல்வம் எம்.பி. ஜனாதிபதிக்கு கடிதம்

(கிளிநொச்சி)

வன்னியில் இடம்பெற்ற யுத்தத்தினைத் தொடர்ந்து அங்கு காணப்படுகின்ற இரும்பு பொருட்களை எடுத்து விற்பனை செய்யும் மக்கள் மீது தற்போது இராணுவத்தினர் மேற்கொண்டு வரும் கண்மூடித்தனமான தாக்குதல் சம்பவத்தை தான் வன்மையாகக் கண்டிப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவத்துடன் ஈடுபட்ட இராணுவத்தினருக்கு எதிராக உடன் நடவடிக்கை எடுக்குமாறும் கூறி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு பாராளுமன்ற உறுப்பினர் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வன்னியில் இடம்பெற்ற யுத்தத்தினைத் தொடர்ந்து அந்த மக்கள் இடம்பெயர்ந்து சென்ற நிலையில் மீண்டும் தமது சொந்த மண்ணில் குடியமர்த்தப்பட்டனர். இந்த நிலையில் இந்த மக்களில் பலர் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக அப்பகுதிகளில் உள்ள இரும்புகளை எடுத்து விற்பனை செய்கின்றனர்.

மிகவும் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற மக்களே குறித்த இரும்புகளை எடுத்து விற்பனை செய்கின்றனர். குறிப்பாக மாத்தளன், பொக்கணை, வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால் போன்ற பகுதிகளிலேயே அதிகளவில் மக்கள் இரும்பை எடுக்கின்றனர்.

இந்த நிலையில் இரும்பை எடுக்கும் மக்கள் மீது தற்போது தொடர்ச்சியாக அப்பகுதிகளில் உள்ள இராணுவத்தினர் தாக்குதல்களை மேற்கொள்கின்றனர். இதனால் இம் மக்கள் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளனர்.

குறித்த இரும்புகளை அகழ்வதற்கு அரசாங்கம் தனியாருக்கான அனுமதியை வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, குறித்த இரும்பு அகழ்வில் ஈடுபட்டு வரும் அப்பாவி பொதுமக்கள் மீது இராணுவத்தினர் மேற்கொள்ளும் தாக்குதல் சம்பவத்தை தான் வன்மையாகக் கண்டிப்பதோடு குறித்த தாக்குதல் சம்பவத்துடன் ஈடுபடும் இராணுவத்தினருக்கு எதிராக உடன் நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

## மாகாண மட்டத்தில் முதலாமிடம் பெற்றார்



(வட்டக்கச்சி)

வடமாகாண கல்வித் திணைக்களமும் டயலொக் நிறுவனமும் இணைந்து நடத்திய சித்திரப் போட்டியில் வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தில் தரம் 6 இல் கல்வி கற்கும் நேசராசா வினோகன் மாவட்ட மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

அத்துடன் இம் மாணவனுக்கு பதினையாயிரம் ரூபா பணம் பரிசாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2-86)

## மதவாச்சி–தலைமன்னார்

# புகையிரத பாதை 81.3 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பு

மதவாச்சி மற்றும் தலைமன்னாருக்கு இடையிலான புகையிரத ஓடுபாதை மீள்புனரமைப்பு திட்டமானது இரண்டு கட்டங்களாக துரிதகதியில் நடைபெற்று வருவதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதன் முதலாம் கட்டத்தின் கீழ் 43 கிலோமீற்றர் புகையிரத ஓடுபாதை 81.3 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு வருவதாகவும் இதன் 65 வீதமான நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் 2013 மார்ச் மாதம் மடுமாதா திருவிழாவை முன்னிட்டு இதன் பணிகள் நிறைவுக்கு கொண்டுவரப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் மடுவில் இருந்து தலைமன்னார் வரையான 63 கிலோமீற்றர் வரையான புகையிரதப் பாதை நிர்மாணப்பணிகளும் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் இதன் 40 வீதமான நிர்மாணப்பணிகள் நிறைவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் இந்தப் பணிகள் எதிர்வரும் 2013 செப்டெம்பர் மாதம் நிறைவு செய்யப்படும் எனவும் கூறியுள்ள அமைச்சர் தெற்கில் மக்கள் அனுபவிக்கும் அனைத்து வசதிகளையும் வடக்கில் வாழும் மக்களும் அனுபவிக்க வேண்டும் என்பதற்காகவும் வடக்கிற்கான போக்குவரத்து வசதியை மேலும் விஸ்தரிப்பதற்காகவும் அரசாங்கம் இந்த நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும் கூறியுள்ளார்.

அத்துடன் புகையிரத ஓடுபாதையின் நிர்மாணப்பணிகளின் மற்றுமொரு பகுதி இந்திய புகையிரத நிர்மாண நிறுவனத்தால் முன்னெடுக்கப்படுவதாகவும் இதன்படி ஓமந்தை பலாலிக்கிடையிலான 90 கிலோமீற்றர் நீளமான புகையிரத ஓடுபாதை இந்திய நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# தமிழர் பிரச்சினைகளுக்கு இலங்கை அரசாங்கம் தீர்வு வழங்க வேண்டும்

## சொல்ஹெய்ம் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் நிலவும் பிரச்சினைக்கு அரசியல் தீர்வினை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென முன்னாள் நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

தமிழ் சமூகத்தின் பிரச்சினைக்கு தீர்வு வழங்க அரசாங்கம் உடனடி முனைப்பு காட்ட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

பி.பி.சீ. ஊடகவியலாளர் பிரான்சிஸ் ஹரிசனினால் எழுதப்பட்ட ஸ்டில் கவுண்டிங் தி டெட் என்னும் நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்ட போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் தமிழ் மக்களை அணுக வேண்டுமாயின் நான்கு முக்கிய காரணிகளுக்கு தீர்வு வழங்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் அரசியல்கைதிகளின் விடுதலை, சட்டவிரோத ஆட்கடத்தல் வடக்கில் இராணுவத்தின் பிரசன்னம் மற்றும் தமிழர் தாயகத்தில் ஏற்படுத்தப்பட்டு வரும் சிங்கள மயமாக்கல் நடவடிக்கைகள் உடனடியாக குறைக்கப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார். (அ-2)

# இரு பெண் யானை குட்டிகள் பராகுவேக்கு அன்பளிப்பு

செக்குடியரசின் பராகுவே மிருகக்காட்சி சாலைக்கு இலங்கையிலிருந்து பெண் யானைக் குட்டிகள் இரண்டு அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

குறித்த இரு யானைக் குட்டிகளும் நேற்று முன்தினம் தமது நாட்டை வந்தடைந்ததாகவும் இலங்கை இராணுவம் தனது விசேட விமானம் மூலம் அவ் யானைக்குட்டிகளைக் கொண்டு வந்து கையளித்ததாகவும் பராகுவே மிருகக்காட்சி சாலையின் பணிப்பாளர் மிரோஸ்லவ் பொபெக் தெரிவித்துள்ளார்.

பின்னவல யானைகள் சரணாலயத்தைச் சேர்ந்த ஜெனிட்டா (வயது 8), தமாரா (வயது 7) ஆகிய இரு யானைக்குட்டிகளுமே இவ்வாறு அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, மேற்படி யானைக்குட்டிகளுக்கு பதிலாக செக்குடியரசிலிருந்து இரு கொமடோ டிராகன்கள், பிரஸ்வால்ஸ்கி குதிரைகள் மற்றும் இரு நீர்யானைகள் இலங்கைக்கு அன்பளிப்பு செய்யப்படவுள்ளதென பராகுவே பணிப்பாளர் மேலும் கூறினார். (அ-2)

## பசிலுடனான சந்திப்பு வெற்றியளித்தது

(கொழும்பு)

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6 சதவீதத்தை ஒதுக்கீடு செய்வது தொடர்பில் இடம்பெற்ற அமைச்சர் பசில் ராஜபக்ஷவுடனான சமரசப் பேச்சுவார்த்தை வெற்றியளித்துள்ளது என பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது. இப் பேச்சுவார்த்தை நேற்று முன்தினம் நடைபெற்றது.

அநேகமாக எமது கோரிக்கைகளுக்கான தீர்வினை வழங்குவதற்கு அரசு தயாராக இருப்பதாகவும் ஏற்கனவே திட்டமிட்டபடி இன்று திங்கட்கிழமை கலாநிதி பி.பி. ஜயசுந்தரவுடனான சந்திப்பின் பின்னர் இவ்விடயம் சாத்தியப்படும் என்று பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்தின் தலைவர் கலாநிதி தேவசிறி மேலும் குறிப்பிட்டார். (அ-2)

## கழிவுத் தேயிலைத்தூள் ஏற்றிச் சென்ற மூவர் கைது

கழிவுத் தேயிலைத்தூள் ஏற்றிச் சென்ற மூவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். மத்திய மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் எச்.எம்.பீ. அம்பன்வலவின் ஆலோசனையின் பேரில் கண்டி மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பில் இந்த கழிவுத்தூள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

உடுநுவர–திவுலகலவில் இருந்து வெல்லம்பட பிரதேசத்தை நோக்கி கொண்டு செல்லப்பட்ட தேயிலைத்தூள் 4 ஆயிரத்து 500 கிலோ கிராம் லொறியுடன் மீட்கப்பட்டுள்ளது.

தேயிலை ஏற்றிச் செல்வதற்கான அனுமதிப்பத்திரம் அவர்களிடம் இருந்திருக்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் தேயிலைத் தூளுடன் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (அ-2)





யாழ். மாவட்ட முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தினால் நடத்தப்பட்ட முச்சக்கரவண்டிகளுக்கு கட்டண அறவீட்டு மீற்றர் பொருத்தும் நிகழ்வு நேற்று முன்தினம் இச்சங்கத் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வின்ரக்சி மீற்றரின் வடக்கிற்கான ஏக விநியோகஸ்தரான பேள்ரெக்நோலஜிஸ் நிறுவனத்தின் இயக்குநர் த. சதீஸ், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவிற்கு மீற்றர் ஒன்றினை வழங்கி வைப்பதையும் அமைச்சர் சங்கத் தலைவரிடம் மீற்றரினைக் கையளிப்பதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருநகர், தெல்லிப்பழை ஆகிய பகுதிகளில் டெங்குத் தாக்கம்

யாழ்.மாவட்டத்தில் டெங்குக்காய்ச்சல் மீண்டும் தீவிரமாகப் பரவி வருகிறது. முக்கிய மாக குருநகர், தெல்லிப்பழை, கொக்குவில் போன்ற பகுதிகளில் தீவிரமான டெங்கு நோயின் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

இவற்றில் குருநகர், தெல்லிப்பழை ஆகிய பிரதேசங்களில் சுகாதாரத் திணைக்களம், உள்ளூராட்சி சபை, பொதுமக்கள், ஏனைய நிறுவனங்களின் ஒன்றிணைந்த செயற்பாட்டினால் நோய்ப் பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

எனினும் நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள கொக்குவில் பகுதியில் நோய்ப்பரவல் அதிகரித்து வருவதுடன் ஏனைய பகுதிகளுக்கும் பரவக் கூடிய ஆபத்து நிலையைத் தோற்றுவித்துள்ளது.

மேலும் கொக்குவில் பகுதியில் டெங்கு நோய் இறப்பொன்றும் ஏற்பட்டுள்ளது. பொதுமக்கள், உள்ளூராட்சி சபையின் ஒத்துழைப்பு உரியமுறையில் கிடைக்கப்பெற்றாலே இந்தப் பகுதியிலும், ஏனைய பகுதிகளிலும் டெங்கு நோய் பரவுவதையும் இதனால் ஏற்படக்கூடிய அநியாயமான உயிரிழப்புகளையும் தவிர்க்க முடியுமென சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

யாழ்.மாவட்டத்தில் இன்று முதல் எதிர்வரும் 14 ஆம் திகதி வரையான காலப்பகுதி விசேட டெங்கு தடுப்பு வாரமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (அ-2)

## கவிதைப்போட்டியில் மூன்றாமிடம்



(யாழ்ப்பாணம்)

யா/இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயமாணவி தேனுஷா சாந்தகுமரன் (தரம்11) மாவட்ட மட்ட ஆங்கிலதின கவிதைப் போட்டியில் 3 ஆம் இடத்தைப் பெற்றுள்ளார். (அ-9)

# மருத்துவபீட மாணவர்களுக்கு இருமொழிப் பயிற்சி வழங்கத்திட்டம்

## அரசகரும மொழிகள் ஆணைக்குழு கவனம்

(கொழும்பு)

மருத்துவ மாணவர்களுக்கான இருமொழிப் பயிற்சிகளை வழங்குவதற்கு அரசகரும மொழிகள் ஆணைக்குழு கவனம் செலுத்தியுள்ளது.

இது தொடர்பாக, கல்வி உயரதிகாரிகளுடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ஆர்.ரணவக்க தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நோயாளர் ஒருவர் தனது தாய்மொழியில் நோய்க் காரணிகளை தெளிவுபடுத்துவதற்கு ஏற்ற வகையில் வைத்தியர்களை தேர்ச்சி பெறச் செய்வதே இந்த திட்டத்தின் நோக்கமாகும்.

குறிப்பாக தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற பகுதிகளில் சேவையாற்றுவதற்காக சிங்கள வைத்தியர்களை அமர்த்தும்போதும் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற பகுதிகளில் தமிழ் வைத்தியர்களை சேவைக்கு அமர்த்தும் போது ஏற்படுகின்ற சிக்கல்களை தவிர்ப்பதற்காகவே இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இத்தகைய சிக்கலான நிலைமைகள் குறித்து தமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இதற்கமைய மருத்துவக்கல்லூரியில் பட்டப்படிப்பை நிறைவுசெய்வதற்கு முன்னதாக மருத்துவ மாணவர்களுக்கு மொழி தொடர்பான அறிவைப் பெற்றுக்கொடுப்பதற்கு இதன்மூலம் திட்டமிடப்பட்டுள்ளது.

மருத்துவப்பட்டப்படிப்பிற்காக இருமொழி தேர்ச்சி மற்றும் பயிற்சிகளின்போது சமூகமளிக்கின்ற விகிதாசாரம் என்பனவற்றை கவனத்தில் கொள்ளுமாறு உயர்கல்வி அமைச்சுக்கு ஆலோசனை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# மக்களின் தேவைகளை இலகுவாக்க பிரஜைகள் பட்டயம் அமைப்பு

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டச் செயலகத்தில் மக்கள் நேடியாக தமது தேவைகளை பூர்த்தி செய்ய முடியும் என்றும் இடைத்தரகர்கள் மூலம் சேவையைப் பெறுவதைத் தவிர்க்குமாறு யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டச் செயலகத்தில் பிரஜைகள் பட்டயம் அமைக்கப்பட்டுள்ளதால் பொது மக்கள் தமது சேவைகளை இடைத்தரகர்கள் இன்றி பெற்றுக் கொள்ள முடியும்.

பொதுமக்களின் வேலைகளை இலகுபடுத்துவதற்கு ஏற்ற வகையில் மாவட்டச் செயலகத்தில் போதியளவு ஆளணி வளம் உள்ளது. இடைத்தரகர்கள் மூலம் தேவைகளை பெற்றுக் கொள்ளும்போது பொது மக்கள் பெரும் நெருக்கடிகளை சந்திக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

திங்கள், புதன் ஆகிய தினங்களில் யாழ். மாவட்டச் செயலகத்தைவிட இடைத்தரகர்களிடமே அதிக மக்கள் காணப்படுகின்றனர். இதனால் பொதுமக்கள் இலகுவாக பெறக் கூடிய சேவைக்கும் பணத்தைச் செலவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பொலிஸார் மூலம் இந்த நடவடிக்கை கட்டுப்படுத்த முயற்சித்தபோது அது பயனளிக்கவில்லை. இதனால் மாவட்டச் செயலகத்தினுள் நேற்று முன்தினம் சனிக்கிழமை தொடக்கம் பிரஜைகள் பட்டயம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் பொதுமக்கள் தங்கள் சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அத்துடன் மாவட்டச் செயலகத்தில் தமது சேவைகளை பெற்றுக்கொள்ள வரும் மக்கள் தங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரி தொடர்பான விளக்கங்களை வரவேற்பாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

சம்பந்தப்பட்ட அதிகாரி பொதுமக்களின் தேவைகுறித்து கவனம் எடுக்காதபட்சத்தில் நேரடியாக தன்னுடன் தொடர்புகொள்ளலாம் என அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (அ-6)

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

இனந்தெரியாத நபர்களினால் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கான நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவர் திவுலபிட்டிய, குடாகம்மன, அத்கால வீதியில் வைத்து நேற்று துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகியுள்ளார்.

லொறி ஒன்றில் சென்று கொண்டிருந்த இவர் மீது மோட்டார் வண்டியில் வந்த இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர்.

உயிரிழந்தவர் வல்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர். (அ-2)

# நீதிச்சேவைகள் ஆணைக்குழு செயலாளர் மீது தாக்குதல்

## அரசாங்கமே பொறுப்பு என்கிறார் மனோ

நீதித்துறைக்கும் நிறைவேற்று அதிகாரத்திற்கும் இடையில் கடந்த மூன்று வாரகாலமாக நடைபெற்றுவரும் சச்சரவுகளின் பின்னணியில் நேற்றையதினம் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுளா திலகரத்ன தாக்கப்பட்டுள்ளார்.

இது இன்று நடக்கும் காட்டாட்சியின் அடையாளம் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார். இது தொடர்பில் மனோ கணேசன் மேலும் கூறியுள்ளவை வருமாறு,

கல்கிசையில் நேற்று காலை தாக்குதலுக்கு உள்ளான நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுளா திலகரத்ன தனக்கும் தனது குடும்பத்தவர்களுக்கும் பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதாக கடந்த வார இறுதியில் முறைப்பாடு செய்திருந்தார்.

நிறைவேற்று அதிகாரத்துக்கும் நீதித்துறைக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை முன்வைத்து நீதித்துறை சார்பாக அவர் கடந்த 18 ஆம் திகதி நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் என்ற முறையில் வெளியிட்டிருந்த அறிக்கையின் பின்னரே இந்த சச்சரவுகள் ஏற்பட்டன. இந்த அறிக்கையில் நீதித்துறையை நோக்கி முன்னெடுக்கப்படும் தலையீடுகளை அவர் விமர்சித்திருந்தார்.

இந்த தாக்குதல்களுக்கு அரசாங்கம் முழுமையாக பொறுப்பு ஏற்க வேண்டும். இது தொடர்பில் அரசாங்கம் நடத்தும் எந்தவொரு நாடகமும் மக்கள் மத்தியில் அரங்கேறாது. ஏனென்றால் அரசாங்கத்தின் ஆசீர்வாதம் இன்றி இத்தகைய தாக்குதல்கள் கொழும்பு பிரதேசத்தில் நடைபெற முடியாது என்பது சிறு குழந்தைக்கும் தெரியும்.

நீதி அமைச்சர் என்கிற முறையிலும் சட்டத்தரணி என்ற முறையிலும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் இந்த பாரதூரமான சம்பவம் தொடர்பில் உடன் ஆளுமையுடன் செயற்பட வேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம். (அ-2)

# வாய்த்தர்க்கம் முற்றியதில் ஒருவருக்கு மண்டை உடைந்தது


(வட்டக்கச்சி)


வட்டக்கச்சி கலைவாணி சனசமூக நிலையத்தினரால் நடத்தப்பட்ட மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியின் இறுதியில் இடம்பெற்ற வாய்த்தர்க்கம் காரணமாக ஒருவர் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வட்டக்கச்சி ஆறுமுகம் வீதியில் அமைந்துள்ள கலைவாணி சவாரித்திடலில் அண்மையில் மாபெரும் மாட்டுவண்டிச்சவாரி இடம்பெற்றது.

இந்நிகழ்வின் இறுதி நேரத்தில் காளை உரிமையாளருக்கும் அறிவிப்பாளருக்குமிடையில் இடம்பெற்ற வாய்த்தர்க்கம் அடிதடியில் முடிவுற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது அறிவிப்பாளராக கடமையாற்றிய கமலேஸ்வரன் கிரிசாந்தகுமார் (வயது 23) என்பவர் தலையில் காயம் ஏற்பட்ட நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (அ-2-86)





சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தின் வடமாகாண கிராமிய சிறுவர்கள் பங்குபற்றிய சர்வதேச சிறுவர்தினம் நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் வரவேற்பு நடனம் இடம்பெறுவதையும் சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட சிறுவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- அலுவலக்ச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியானது எது என உணர்ந்த பிறகும் அதைச் செய்யாமல் இருப்பதே மகா கோழைத்தனம்.

-கன்பூசியஸ்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## டெங்கு ஒழிப்பை அடிக்கடி மறந்து விடுகிறீர்களே

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரி முன்னர் வைத்தூறு போலக் கெடும் என்றான் வள்ளுவன்.

வரும் முன்னர் காப்பது வாழ்க்கையின் மிகப் பெரிய பணி. அவ்வாறு காப்பாற்றத் தவறின் அஃது வைக்கோலுக்கு முன்வைக்கப்பட்ட நெருப்புப் போல ஆகிவிடும்.

வள்ளுவரின் மேற்போந்த குரள் சுகாதார திணைக்களங்கள் மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கு மிகவும் பொருத்துடையது.

சுகாதாரத் திணைக்களங்களிற்குட்பட்ட சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனைகளின் கடமை என்பது நோய்வராமல் தடுப்பதாகும். அதாவது வருமுன்னர் காக்கின்ற பணியாகும்.

அதேபோல் உள்ளூராட்சி சபைக்குட்பட்ட மாநகர சபைகள், பிரதேச சபைகள் தங்கள் கடமையை செவ்வையாகச் செய்ய வேண்டும்.

செல்வாக்கின் அடிப்படையில் தான் தார் வீதி போடுவது, செல்வாக்கின் அடிப்படையில் தான் குப்பைகள் அகற்றுவது என்ற நிலைமை இருக்குமாயின் பொது ஒழுங்கு என்பதை எவராலும் உருவாக்கிவிட முடியாது.

எனவே உள்ளூராட்சி சபைகள் தங்கள் பணிகளை பக்கச் சார்பின்றி செம்மையாக செய்ய வேண்டும்.

அரசியல் தலையீடு என்று சாட்டுச்சொல்லித் தப்பித்துக் கொள்கின்ற கலாசார நடைமுறை எங்களிடம் தாராளமாக இருப்பதை உணர முடிகின்றது.

புத்திஜீவிகள் **பயம்** என்ற சுலோக அட்டையைத் தூக்கிப்பிடிக்கிறார்கள்.

அரச பணியாளர்கள் **அரசியல் தலையீடு,** எதுவும் செய்ய முடியாது என்று சொல்லிவிட்டு சுய இலாபம் ஈட்டுவதில் ஈடுபடுகின்றார்கள்.

இப்படியான ஏமாற்றுத்தனங்கள் வாழ்வாகிவிட்டால் டெங்கும் தொற்று நோய்களும் தொற்றாத வியாதிகளும் விபத்துக்களும்தான் தாண்டவமாடும்.

எனவே அரச பணியாளர்கள் தங்கள் கடமைகளை சரிவரச் செய்ய வேண்டும். இதனை மேற்பார்வை செய்வதற்கு உயர் அதிகாரிகள் இலஞ்சமற்ற கரத்தோடு, கடவுள் தந்த பதவியென்று எண்ணி பணியாற்ற வேண்டும்.

அப்போதுதான் எங்கள் மண்ணில் நோய்கள் கெட்டு சாந்தியும் சமாதானமும் நிலவும்.

நேற்று முன்தினம் டெங்கு காய்ச்சலினால் ஒரு மாணவனை பறிகொடுத்த பரிதாபத்திற்கு பதிலளிக்க வேண்டிய பொறுப்பு பலருக்குண்டு.

நல்லூர் பிரதேச சபைப் பகுதியில் 25 பேருக்கு டெங்கு தொற்று இனங்காணப்பட்டுள்ளதான தகவல் அதிர்ச்சிக்குரியது. எனவே டெங்கு நோயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர நல்லூர் பிரதேச சபை களத்தில் குதிக்க வேண்டும்.

நல்லூர் பிரதேச சபையின் நிர்வாக செயல் ஒழுங்குகள் குறித்து எழுந்துள்ள விமர்சனங்களை அசமந்தமாக்காமல் உரிய நடவடிக்கை எடுப்பதும் பொதுமக்களைக் கவட்டி நிலைமையை ஆராய்வதும் அவசியம்.

# அடிப்படை வசதிகள் எதுவுமின்றி தமிழ் மக்கள் அல்லல்படுகின்றனர்

## ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவிப்பு



(கொழும்பு)

யுத்தம் முடிபடைந்து மூன்று வருடங்கள் கடந்துள்ளன. ஆனால் தமிழ் மக்களுக்கு இன்னும் நியாயமான தீர்வு கிட்டவில்லை. அவர்கள் இன்னும் அடிப்படை வசதிகளின்றி அல்லல்படுகிறார்கள். அவர்கள் இன்னல்களுடனும் அச்சத்துடனும் வாழ்ந்து வருவது கவலையளிக்கிறது. இவ்வாறு ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்தார்.

மறைந்த நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான பாரதலக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் மகளான ஹிருணிகா பிரேமச்சந்திர ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

தமிழ் மக்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்படக் கூடாது. அவர்களுக்கும் நியாயம் கிடைக்க வேண்டும். சிங்கள மக்கள் அனுபவிக்கின்ற அதே உரிமைகளையும், சலுகைகளையும் தமிழ் மக்களும் அனுபவிக்க வேண்டும். யுத்தம் முடிபடைந்து மூன்று வருடங்கள் கடந்துள்ள போதிலும் அவர்கள் இன்னல்களுடனும் அச்சத்துடனும் வாழ்ந்து வருவது கவலையளிக்கிறது.

எனவே, தொடர்ந்து அவர்களை ஏமாற்றாமல் அவர்களை சுதந்திரமாகவும், நிம்மதியாகவும் வாழவைப்பதற்கான சூழலை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

இயற்கைக் கடன்களைச் செய் வதற்கான சரியான வசதியில்லாமல், குடிக்க நல்ல தண்ணீர் இல்லாமல் வருடக்கணக்கில் வடக்கு மக்கள் கொட்டில்களில் இருக்கிறார்கள்.

சிங்கள மக்கள் ஒருநாள் இந்த நிலைமையை அனுபவித்துப் பார்த்தால் அவர்களின் நிலைமை புரியும். அப்போதாவது தமிழ் மக்கள் எதிர் நோக்கும் பிரச் சினைகளையும் அவர்களுக்கு செய்ய வேண்டிய மனிதாபிமான உதவிகளை யும் அறிந்து கொள்ள முடியும்.

இனவாதத்தைப் பேசிக்கொண்டு அதிலே அரசியல் லாபம் தேட சிலர் முற்படுகிறார்கள். இவ்வாறானவர்களின் மனிதாபிமானமற்ற சுயநல போக்கினை சிங்கள மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ், முஸ்லிம் மக்கள் நமது சகோதரர்கள். அவர்களும் இந்த நாட்டுப் பிரஜைகள் அத்தோடு நாட்டின் வளர்ச்சிக்கும் இன்னும் பல விடயங்களுக்கும் அவர்கள் பெரும் பங்காற்றியுள்ளார்கள். எனவே, அவர்களை ஒருபோதும் பிரித்துப்பார்க்க கூடாது என்றார். (எ-8)

## இராணுவம் பொய் கூறுவதாக எந்தச் சந்தர்ப்பத்திலும் கூறவில்லை

### யாழ்.அரச அதிபர் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி காணி விவகாரம் தொடர்பில் வலம்புரியில் நேற்று முன் பக்கத்தில் பிரசுரமாகியிருந்த செய்தியில் பிரதேச சபைக்கு கடிதம் அனுப்பியது தொடர்பாக வெளியான செய்தியை யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் மறுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள மறுப்பறிக்கையில்,

மேற்படி செய்தியில், இராணுவத்தினர் பொய் கூறுவதாக பிரதேச சபைக்கு அரச அதிபர் கடிதம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ள கூற்றினை நான் முற்று முழுதாக மறுதலிக்கின்றேன்.

இராணுவத்தினர் பொய் கூறுவதாக பிரதேச சபை தவிசாளருக்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் என்னால் எதுவித கடிதங்களும் வழங்கப்படவில்லை என அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## போலி ஆயிரம் ரூபா தாள்களுடன் சந்தேகநபர்கள் மூவர் கைது

(கொழும்பு)

கந்தளாய்ப் பிரதேசத்தில் உள்ள கடைகளில் 147 போலி ஆயிரம் ரூபாய் நாணயத்தாள் விநியோகித்த 3 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கந்தளாய்ப் பிரதேசத்தில் உள்ள கருவாடு விற்பனை நிலையம், பால் விற்பனை நிலையம் உட்பட மேலும் சில கடைகளுக்கு இந்தப்போலி நாணயத்தாள்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விற்பனை நிலையங்களிலிருந்து மேலும் சில போலி நாணயத்தாள்களையும் மீட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்நிலையில் மேற்படி நாணயத் தாள்களை விநியோகித்துள்ள சந்தேநபர்கள் பயணித்த வாகனத்தை ஹபரணை பொலிஸார் சோதனைக்கு உட்படுத்தியதை அடுத்தே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக கந்தளாய் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். (அ-2)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## மனவளக்கலை ஒரு பெட்டகம்



தான் உயரவும் பிறரை உயர்த்தவும் ஏற்ற பயிற்சியும் தொண்டும் மனவளக்கலையில் அடங்கியுள்ளன.

இரண்டுவேளையும் ஆக்கினை, துரியம், சாந்தியோகம் தவறாமல் தவமியற்றி வாருங்கள். மனஅமைதி, அறிவுக்கூர்மை, அறிவின் ஓர்மை, மன உறுதி இவையுண்டாகும்.

தற்சோதனையில் எண்ணங்களை ஆராயுங்கள். விழிப்பு நிலையில் அறிவு செயற்படும். நலம், தீது உணர் ஆற்றல் உண்டாகும். வேண்டாப் பதிவுகளை- வினைப்பதிவுகளை மாற்றிவிடலாம்.

ஆசைச் சீரமைப்புப் பயிற்சி செய்யுங்கள். உடல் நலம், மனவளம், பொருள்வளம், நற்புகழ், நிறைவு இவை பெருகும். அமைதியுண்டாகும்.

சினம் தவிர்ப்புப் பழகுங்கள். குடும்பம், நண்பர்கள், தொழில் செய்யுமிடத்திலுள்ளோர், உற்றார் உறவினர் இவர்களிடம் உங்கள் அன்பு, நட்பு இவை பெருகும். இனிமையும் மகிழ்ச்சியும் உண்டாகும்.

கவலை ஒழிப்புப் பழகுங்கள். அச்சமின்மை, மெய்யுணர்வு, உடல்நலம், மனநிறைவு இவை உண்டாகும்.

நான் யார் என்ற ஆராய்ச்சியில் தெளிவு பெறுங்கள். பேரியக்க மண்டலம், தோற்றம், இயக்கம், விளைவு, அனைத்து மறை பொருட்கள், மனம், உயிர், மெய்ப்பொருள் உணர்வு உண்டாம்.

இவ்வளவு பயிற்சியும் பழக்கமும் இணைந்த ஒருவாழ்க்கை நலக்கல்வியே மனவளக்கலையாகும். இக்கலையை எளிய முறையில் கற்கும் பேறு பெற்றிருக்கிறீர்கள். இக்கலையின் மாண்புணர்ந்து பழகி நலம் பெற்று மனதில் நிறைவு பெறுங்கள். மனநிறைவைப் பெற்றுவிட்டால் அறிவு மேலும் உயர்ந்து சிறந்து விளங்கும். பிறவியின் நோக்கம் வெற்றிபெறும். இத்தகைய உயர் வாழ்வுக்கு ஏற்ற ஒரு பெட்டகம் மனவளக்கலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சர்வதேச கூட்டுறவுத்தின விழாவினை முன்னிட்டு நடத்தப்பட்ட நீச்சல் போட்டி முடிவுகள்




மேற்படி நீச்சல் போட்டியானது 28.09.2012 அன்று காரைநகர் கசூர்ணாபீச் கடற்பகுதியில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள உதவிப்பணிப்பாளரும் காரைநகர் உதவி அரசாங்க அதிபரும் யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தலைவர், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர், யாழ்ப்பாணம் நீச்சல்பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் சங்க சமாசங்களின் தலைவர்களும் வருகை தந்திருந்தனர். இவர்கள் தலைமையில் காலை 10.25 மணியளவில் ஆரம்பித்து வைக்கப்பட்டு 10.51 மணியளவில் நிறைவடைந்தது.

இந்நீச்சல் போட்டியில் பங்கு பற்றியவர்களின் நிலை விபரங்கள் பின்வருமாறு,

முதலாம் இடம் செல்லமராக்காயர் பிரதீபன் யாழ்ப்பாணகடற்றொழிலாளர் கூ.ச.சமாசம் (குருநகர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்), இரண்டாம் இடம் ஸ்.றோக்சார்லின் யாழ்ப்பாண கடற்றொழிலாளர் கூ.ச.சமாசம் (பாசையூர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்), மூன்றாம் இடம் பி.அருள் றெக்ஸ்சன் யாழ்ப்பாண கடற்றொழிலாளர் கூ.ச.சமாசம் (பாசையூர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்),

பங்குபற்றிய ஏனையவர்களின் விபரம்

பி.அருள்ராஜ் (யாழ்ப்பாண கடற்றொழிலாளர் கூ.ச.சமாசம், பாசையூர்), ஜெ.ஜெயரஞ்சன் (யாழ்ப்பாண கடற்றொழிலாளர் கூ.ச.சமாசம் (உடுத்துறை) ,ஜி.எடிசன் (வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூ.ச.சமாசம் (உடுத்துறை),எல்.கஜேந்திரன் வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூ.ச.சமாசம் (கட்டைக்காடு), செ.பரமலிங்கம் (காரைநகர் கடற்றொழிலாளர் கூ.ச.சமாசம் (காரைநகர்), செ.ஏகாம்பரம் காரைநகர் கடற்றொழிலாளர் கூ.ச.சமாசம் (சிவகௌரி) ,அ.அன்ரனி நியூறன் யாழ்ப்பாண கடற்றொழிலாளர் கூ.ச.சமாசம்(குருநகர்)

## கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் புதிய பாரதி வி. கழகம் வெற்றி

கிளிநொச்சி மலையாள்புரம் புதிய பாரதி விளையாட்டுக்கழகத்தினால் புதிதாக அமைக்கப்பட்ட மைதானத் திறப்பு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட ஆண், பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

புதிய பாரதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் ஆடவர், மகளிர் ஆகிய இரு பிரிவுகளிலும் புதிய பாரதி விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று சம்பியனாகியது.

முதலில் இடம்பெற்ற ஆடவர்களுக்கான இறுதியாட்டத்தில் புதிய பாரதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மருத நிலா விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

5 சொற்களை கொண்ட ஆட்டத்தில் புதிய பாரதி விளையாட்டுக்கழக அணி 4:3 என்ற செற்கணக்கில் வெற்றி யீட்டி சம்பியனாகியது.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் கிருஷ்ணபுரம் விபுலானந்தா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புதிய பாரதி விளையாட்டு கழக அணி மோதிக்கொண்டது.

இதில் புதிய பாரதி விளையாட்டு கழக அணி 2 நேர் செற்களை 25:20, 26:24 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிகொண்டு சம்பியனாகியது.

# நன்னியன் ஞாபகார்த்த கரப்பந்தாட்டம்; உடுப்பிட்டி நவஜீவன் சம்பியன்





நன்னியன் ஞாபகார்த்தமாக புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்திய மாவட்ட மட்டத்திலான கரப்பந்தாட்ட போட்டி மின்னொளியில் புதன்கிழமை நடைபெற்றது. கழகத்தலைவர் தலைமையில் நடைபெற்ற இவ்விறுதிப்போட்டிக்கும் பரிசளிப்பு விழாவிற்கும் பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் பிரதீபனும் சிறப்பு விருந்தினராக அச்சுவேலி இலங்கை வங்கி முகாமையாளர் புவனேந்திரனும் கௌரவ விருந்தினராக யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சம்மேளனத் தலைவர் மனோகரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். முதலில் நடைபெற்ற B பிரிவிற்கான இறுதிப்போட்டியில் பன்னாலை கணேசன் அணியும் புத்தூர் வளர்மதி அணியும் பலப்பரீட்சை நடத்தின. முதலாவது சுற்றில் பன்னாலை கணேசன் சிறப்பாக ஆடி 25:20 என்ற கணக்கில் கைப்பற்றியது. இரண்டாவது சுற்றில் பதிலடி கொடுத்த புத்தூர் வளர்மதி 25:18 என்ற கணக்கில் கைப்பற்றியது. மூன்றாவது சுற்று பரபரப்பாக நடைபெற்று இறுதியில் பன்னாலை கணேசன் சிறப்பாக ஆடி 28:26 என்ற கணக்கில் கைப்பற்றியது. நான்காம் சுற்றிலும் சிறப்பாக ஆடிய பன்னாலை கணேசன் 25:22 என்ற கணக்கில் வெற்றி பெற்று B பிரிவில் சம்பியன் பட்டத்தை பன்னாலை கணேசன் அணி தன்வசமாக்கியது.

தொடர்ந்து நடைபெற்ற A பிரிவிற்கான போட்டியில் அச்சுவேலி விக்கினேஸ்வரா அணியும் உடுப்பிட்டி நவஜீவன் அணியும் மோதின. ஆரம்பத்திலிருந்தே அபாரமாக ஆடிய உடுப்பிட்டி நவஜீவன் அணி முதலாவது சுற்றை இலகுவாக 25:17 என்ற ரீதியிலும் இரண்டாவது சுற்றில் போராடி 28:26 என்ற ரீதியிலும் மூன்றாவது சுற்றில் சிறப்பாக ஆடி 25:22 என்ற கணக்கில் கைப்பற்றி 3:0 என்ற நேர்செட்களில் வெற்றிபெற்று A பிரிவில் சம்பியன் பட்டத்தை உடுப்பிட்டி நவஜீவன் அணி கைப்பற்றியது. B பிரிவின் சிறந்த விளையாட்டு வீரனாக பன்னாலை கணேசன் அணியின் பிறெக்ஸனும் A பிரிவில் சிறந்த விளையாட்டு வீரனாக உடுப்பிட்டி நவஜீவன் அணியின் நிருசாந்தும் தெரிவானார்கள். வெற்றி பெற்ற அணிகளுக்கான வெற்றிக்கிண்ணத்தையும் காசோலையையும் விருந்தினர்கள் வழங்கி கௌரவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகக் கிண்ண இருபது-20: இலங்கைக்கு அதிர்ச்சியளித்து

# சம்பியனானது மேற்கிந்தியத் தீவுகள்







இருபது-20 கிரிக்கெட் உலகக் கிண்ணத்தை மேற்கிந்தியத் தீவுகள் அணி கைப்பற்றியது.

கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நடந்த இறுதியாட்டத்தில் இலங்கை அணியை 36 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றி பெற்றது.




இருபது-20 உலகக்கிண்ணப் போட்டிகளில் மேற்கிந்தியத் தீவுகள் சம்பியனாவது இதுவே முதல்முறை.

1979க்குப் பின்னர் அவ்வணி எந்தவொரு உலகக்கிண்ணத்தையும் வென்றதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இவ் இறுதிப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

கிறிஸ் ஹெயில், ஜோன்சன் சாள்ஸ் ஆகியோர் ஆரம்ப வீரர்களாக களம் இறங்கினார்கள்.

முதல் ஓவரே மேற்கிந்தியத் தீவுகளுக்கு அதிர்ச்சியாக அமைந்தது. மத்தியூஸ் வீசிய அந்த ஓவரின் 5-வது பந்தில் ஜோன்சன் சாள்ஸ் குலசேகரவிடம் பிடிகொடுத்து டக் அவுட்டானார்.

அடுத்து ஹெயிலுடன் சாமுவேல்ஸ் இணைந்தார். வழக்கமாக அதிரடி காட்டும் ஹெயில் இலங்கை வீரர்களின் பந்துவீச்சில் ஓட்டங்கள் எடுக்க திணறினார். 16 பந்துகளில் 3 ஓட்டங்களே எடுத்த நிலையில் அஜந்த மெண்டிஸின் பந்தில் எல்பிடபிள்யூ ஆனார்.

ஹெயிலின் ஆட்டமிழப்பைத் தொடர்ந்து களமிறங்கிய பிராவோ சாமுவேல்ஸுடன் இலங்கை அணியின் பந்துவீச்சை நிதானமாக எதிர் கொண்டு விளையாடி வந்தார்.


இந்தநிலையில் பிராவோ 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க அதன்பின்னர் மேற்கிந்தியத் தீவுகளின் விக்கெட்டுக்கள் சரிந்து கொண்டு சென்றன. பொல்லார்ட் 2, ரசல் 0 என அடுத்தடுத்து ஆட்டமிழந்து செல்ல மறுமுனையில் சாமுவேல்ஸ் அதிரடியாக விளையாடி ஓட்டங்களைக் குவித்தார்.

சாமுவேல்ஸ் 56 பந்துகளில் 78 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார். இறுதி ஓவர்களில் அணித் தலைவர் டரன் சமியின் அதிரடியான ஓட்டக்குவிப்புடன் மேற்கிந்தியத் தீவுகள் சற்றுப் போராடக்கூடிய ஓட்ட எண்ணிக்கையை அடைந்தது.




மேற்கிந்தியத் தீவுகள் 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 137 ஓட்டங்களை எடுத்தது.

இறுதிவரை ஆட்டமிழக்காது டரன் சமி 26 ஓட்டங்களை 15 பந்துகளில் எடுத்தார்.



எட்டக்கூடிய இலக்கு என்பதால் இலங்கை அணி வீரர்கள் உத்வேகத்துடன் களமிறங்க, மறுமுனையில் மேற்கிந்தியத் தீவுகள் தாங்கள் போராடி பெற்ற இலக்கை மாற்றான் அணி அடைந்துவிடக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தனர்.

இதை நிரூபிக்கும் வகையில் இலங்கையின் ஆரம்ப விக்கெட் வேகமாக வீழ்த்தப்பட்டது.

அந்த அணியின் அதிரடி ஆரம்ப வீரர் டில்ஷான் ஓட்டங்கள் எதுவுமின்றி ஆட்டமிழக்க அது மேற்கிந்தியத் தீவுகளுக்கு உத்வேகத்தைக் கொடுத்தது.

இலங்கை அணியின் ஆரம்பவீரர் டில்சான் ஓட்டங்கள் எதுவுமின்றி ஆட்டமிழந்தது அந்த அணிக்கு ஆரம்பத்திலேயே பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது.

அதன்பின்னர் இணைந்த சங்கக்கார-மஹேல ஜெயவர்த்தன ஜோடி சிறப்பாக ஆடியது. இந்நிலையில் சங்கக்கார 22 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இலங்கை அணியின் வீழ்ச்சி தொடங்கியது.

அணியின் தலைவர் மஹேல ஜெயவர்த்தன மட்டுமே அதிகபட்சமாக 33 ஓட்டங்களை எடுத்தார். வேகப்பந்து வீச்சாளர் நுவான் குலசேகர 26 ஓட்டங்களை எடுத்தாலும் அது இலங்கை அணிக்கு பெரிய அளவில் உதவவில்லை.

மேற்கிந்தியத் தீவுகளின் பந்துவீச்சு மட்டுமல்ல அவர்களின் களத்தடுப்பும் மிகவும் சிறப்பாக இருந்தது.

அந்த அணியின் மார்லன் சாமுவேல்ஸ், சுனில் நரேன், அணித் தலைவர் டரன் சமி ஆகியோரின் பந்துவீச்சு மிகச் சிறப்பாக அமைந்தது. இது அவர்களுக்கு உலகக்கிண்ணத்தைப் பெற்றுக் கொடுத்தது.


இலங்கை அணியை உற்சாகப்படுத்தும் வகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இறுதி ஆட்டத்தை அரங்கில் இருந்து பார்த்தார். எனினும் இலங்கை அணி தோல்வியையே அவருக்கு பரிசாகக் கொடுத்தது.

இலங்கை அணி 18.4 ஓவர்களில் 101 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதனால் 36 ஓட்டங்களால் மேற்கிந்தியத் அபார வெற்றி பெற்றது.

வெற்றி குறித்து மேற்கிந்தியத் தீவுகள் அணியினர் தெரிவிக்கையில்,

தமது அணி வெற்றி பெற்றது தமக்கு மட்டுமல்ல மேற்கிந்தியத் தீவுகளைச் சேர்ந்த அனைத்து நாடுகளுக்குமே மகிழ்ச்சியும் பெருமையும் அளிக்கக்கூடிய விடயம் எனத் தெரிவித்தனர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக மார்லன் சாமுவேல்ஸ் தேர்வானார்.




## மகளிர் இருபது-20 ஆஸி சம்பியன்



மகளிருக்கான இருபது-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் இலங்கையில் நடைபெற்றது.

இதில் நேற்று மாலை நடைபெற்ற இறுதிப் போட்டியில் இங்கிலாந்து-அவுஸ்திரேலிய அணிகள் மோதின. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி, ஆரம்பம் முதலே சிறப்பாக ஆடியது.

அந்த அணி 20 ஓவர் முடிவில் 4 விக்கெட் இழப்பிற்கு 142 ஓட்டங்களைக் குவித்தது.

பின்னர் 143 ஓட்டங்களை இலக்காக் கொண்டு ஆடிய இங்கிலாந்து அணி, 20 ஓவர் முடிவில் 9 விக்கெட்டுகளை இழந்து 138 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.

இதனால் அவுஸ்திரேலிய அணி 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



### ஜெயக்குமார் கீர்த்திகன்

அன்னைமடியில் :- 16.06.1995
ஆண்டவன் அடியில் :- 06.10.2012



அன்பான நண்பா! அருமைத் தோழா!
எம்முடன் இன்று இல்லை-நீ
எங்கு சென்றுவிட்டாய்!
துடுப்பெடுத்த எங்கள் கைகள்
சோர்ந்து போய்விட்டதடா!
சென்றவாரம் கண்டோம்-உன்னை
சிறப்பான பரிசுடனே!
இந்தவாரம் எம்மைவிட்டு
இறைவனடி சேர்ந்துவிட்டாய்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
உன் ஆத்மா சாந்திபெற இறைவனை நாம்
வேண்டுகின்றோம் - நண்பர்கள்


# நீதிபதிகள் இன்று...

நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ண, கொழும்பின் புறநகர்ப் பகுதியான கல்கிசையில் சென்.தோமஸ் கல்லூரிக்கு அருகில் வைத்து ஆயுததாரிகளால் தாக்கப்பட்டார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் மனைவி மற்றும் மகனை கல்லூரியில் இறக்கிவிட வந்திருந்த மஞ்சுள திலகரட்ண காரில் அமர்ந்திருந்த போது, அருகில் வந்தவர்கள் கைத்துப்பாக்கியைக் கொண்டு அவரை அடித்து தாக்கிவிட்டு அவரது கைத்தொலைபேசியையும் எடுத்துக் கொண்டு சென்றுவிட்டதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முகத்திலும் வலது கையிலும் காயங்களுக்குள்ளான நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். இந்தத்தாக்குதலை இலங்கை சட்டத்தரணிகள் சங்கமும் ஜனநாயகத்துக்கான சட்டத்தரணிகள் அமைப்பும் கண்டித்துளன.

இந்தத் தாக்குதலை அரசின் உயர்மட்டத்தைச் சேர்ந்தவர்களின் ஆட்களே நடத்தியிருப்பதாக ஜனநாயகத்துக்கான சட்டத்தரணிகள் அமைப்பு குற்றஞ்சாட்டியிருக்கிறது.

இதேவேளை, நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மீதான தாக்குதல் சம்பவம் குறித்து விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார். மருத்துவமனையில் உள்ள மஞ்சுள திலகரட்ணவை பார்க்கச் சென்ற நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமும் சம்பவத்தைக் கண்டித்திருக்கிறார்.

நீதித்துறையின் சுதந்திரத்துக்கு இந்த அச்சுறுத்தலை அடுத்து இலங்கை நீதிபதிமாரின் சங்கம் அவசரமாக நேற்றுக் கூடி இன்றைய தினம் கடமைகளை புறக்கணிக்கும் முடிவை எடுத்துள்ளதாக சங்கத்தின் தலைவர் ஏகேஎம்.பட்டபெந்திகே கூறியுள்ளார். மஜிஸ்ரேட் நீதவான்கள் மட்டும் திடீர் மரண விசாரணைகள், தடுப்புக்காவல் நீடிப்பு மற்றும் 24 மணி நேரத்துக்குள் ஆஜர்படுத்தப்பட வேண்டிய சந்தேகநபர்களுக்கான விசாரணைகள் போன்ற அவசிய கடமைகளைப் புரிவார்கள்என்றும்செவ்வாய்க்கிழமைகூடவுள்ளநீதிபதிமார்சங்கத்தின் பொதுச்சபை அடுத்தகட்ட நடவடிக்கைபற்றி தீர்மானிக்கும் என்றும் பட்டபெந்திகே தெரிவித்தார். (எ)

# இலங்கையும் இந்தியாவும்...

இலங்கையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆயுத செயற்பாடுகள் முற்றுமுழுதாக இல்லாதொழிக்கப்பட்ட போதிலும், வெளிநாடுகளில் புலிகளின் ஏனைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிறிய சந்தர்ப்பங்களைக் கூட பயன்படுத்தி தமிழீழ விடுதலைப்புலிகள் மீள ஒருங்கிணைய முயற்சிக்கக் கூடும். பிரிவினைவாத கோட்பாடுகளை தமிழீழ விடுதலைப்புலிகள் தொடர்ச்சியாக உலகின் பல நாடுகளில் பிரசாரம் செய்து வருகின்றனர். தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரசன்னம் தொடர்ந்தும் அச்சுறுத்தலாகவே காணப்படுகின்றது.

இலங்கையும் இந்தியாவும் ஒன்றிணைந்து தமிழீழ விடுதலைப்புலிகளின் சர்வதேச வலையமைப்பை தகர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமானது என அவர் வலியுறுத்தியுள்ளார்.

அப்பாவிகள் என்ற போர்வையில் தமிழீழ விடுதலைப் புலிகள் பாரிய அழிவுகளை ஏற்படுத்தியுள்ளதாகவும், இலங்கையின் பாரிய பிரச்சினைகளுக்கு புலிகளே காரணம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-8)


## வடமராட்சியில்...

3வது பிரிவு ஆரம்பம் -10.10.2012 (3 pm)

SPOKEN ENGLISH WITH GRAMMAR

பிரபல ஆசிரியர்

B.JYOTHY

OXFORD ENGLISH ACADEMY

P.K.Lane Point pedro

TP:- 0776689066

(அனுமதிக்கு முந்துங்கள்)

(C-1244)


# இந்தியாவின் உத்தரவாத...

இது தொடர்பாக அண்மையில் புதுடில்லி சென்றிருந்த இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடன் விரிவாக ஆராய்ந்துள்ளார்.

நேற்று முன்தினம் புதுடில்லிக்குப் புறப்பட்டுச் சென்றுள்ள இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஐந்து பேர் கொண்ட குழுவுக்கு மகிந்த ராஜபக்ஷ-மன்மோகன் சிங் சந்திப்புத் தொடர்பாக, இந்தியா விளக்கமளிக்கவுள்ளது.

புதுடில்லி சென்றுள்ள குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா, எம்.ஏ.சுமந்திரன், சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இதன்போது இருதரப்புப் பேச்சுக்கள் மற்றும் தெரிவுக் குழுவில் சமநேரத்தில் பங்கேற்பதை இந்தியா உத்தரவாதப்படுத்தியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள், புதுடில்லியில் முக்கியமாக இந்திய மத்திய அமைச்சர்கள் நாராயணசுவாமி, எஸ்.எம்.கிருஸ்ணா, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் ஆகியோருடன் பேச்சுக்களை நடத்தவுள்ளதுடன் இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங்கையும் சந்திக்கவுள்ளனர். (எ-8)


## நியூ நெல்சன் லேணர்ஸ்

L அரச அங்கீகாரம் பெற்ற A தர முதன்மை சாரதிப்பயிற்சிப்பாடசாலை L

- குறைந்த கட்டணத்தில் AD சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளலாம்.
- சாரதிப் பயிற்சிகள் எமது அலுவலகத்தில் இருந்து ஆரம்பிக்கப்படும்.
- தாங்கள் விரும்பிய நேரங்களில் சாரதிப் பயிற்சியினை பெற்றுக் கொள்ளலாம்.
- சகல வாகனங்களுக்கும் அனுபவம் மிக்க சாரதிகளினால் சிறந்த முறையில் பயிற்றுவித்து விரைவாக சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொடுக்கப்படும்.
- எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய Multimedia மூலம் விசேட வகுப்புக்கள்.
- அதிகூடிய பயிற்சி நேரங்கள், அதிகூடிய பயிற்சிக் காலங்கள்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- வீதி ஒழுங்குமுறை நூல் இலவசமாக வழங்கப்படும்.
- எமது சகல கிளை அலுவலகங்களிலும் குறைந்த கட்டணத்தில் மருத்துவச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளலாம்.

01.07.2010 தொடக்கம் 15.10.2010 வரை கிளிநொச்சி மாவட்டத்தில் எம்மிடம் காரதி அனுமதிப்பத்திரம் பெற்ற அனைவரும் AD சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளலாம்.

இல 89, கண்டி வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
0212224527, 0214923113,
0773581916

கிளைகள்

இல 127, பருத்தித்துறை வீதி,
நெல்லியடி, கரவெட்டி.
0214923115




(592)


# 13ஆவது அரசியல்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் புதுடில்லிக்கு விஜயம் செய்கின்றனர்.

இந்தியா, 13-வது சட்டத்திருத்தத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயங்களை இலங்கை அரசு அமுல்படுத்த வேண்டும். போரால் பாதிக்கப்பட்ட வட பகுதி மக்கள் மீண்டும் தமது இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப இலங்கை அரசு அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும். என்றும் தொடர்ந்து கூறி வருகிறது.

அரசியல் தீர்வு மற்றும் மீள்குடியேற்றம் தொடர்பில் இலங்கை அரசு போதிய அக்கறை காட்டவில்லையென தமிழகத்தில் குரல்கள் அதிகமாக எழுந்துள்ள நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் டில்லி செல்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக இரா.சம்பந்தன் அளித்த செவ்வியில், 13-வது சட்டத்திருத்தத்தை நிறைவேற்றத்தயார் என்று அரசு கூறவில்லை. அதை அரசியல் தீர்வாக அவர்கள் முன்னிறுத்தவும் இல்லை என்று சம்பந்தன் சுட்டிக்காட்டினார்.

ஏற்கெனவே அளிக்கப்பட்டிருக்கும் குறைந்தபட்ச அதிகாரங்களைப் பறிக்கவே திவிநெகும சட்டமூலம் கொண்டு வரப்பட்டுள்ளது என்றும், இந்நிலையில் அரசியல் பிரச்சினைக்கு 13-வது சட்டம் திருத்தம் தீர்வாகாது என்றும் அவர் குற்றம்சாட்டினார். அதேநேரம் இந்தியப்பிரதமரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சந்திப்பார்களா? என்ற கேள்விக்கு அவர் நேரடியாகப் பதிலளிக்கவில்லை.

இலங்கை ஜனாதிபதி அரசியல் தீர்வு தொடர்பாக இந்தியாவுக்கு வழங்கிய பல்வேறு வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்றும்சம்பந்தன்தெரிவித்தார். நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் சேரச்சொல்லி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இந்தியாவிடமிருந்து அழுத்தம் ஏதும் வரவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (எ-8)


துரித மீட்டலும் வினா-விடை வகுப்பும்

A/L -2013 LOGIC

எஸ்.எஸ்.மனோகரன்

ஆரம்பம்: 10.10.2012 புதன் 4.00 மணி

புதிதாகத் தோற்றும் மாணவர்களுக்கும், ஏற்கெனவே தோற்றிய மாணவர்களுக்கும் உரியது.

BEACON

வெலிங்டன் சந்தி, யாழ்.நகர்.

(596)



சவுதி அரேபியாவில் உடனடி வேலைவாய்ப்பு

வடபுலத்தில் வாழும் இளைஞர்களே! இதோ உங்களுக்காக அதிஉயர் சம்பளத்துடன் கீழ்வரும் வேலை வாய்ப்புக்கள் உடனடியாக காத்திருக்கின்றன.

ஸ்பிரே பெய்ன்டர் (Auto) | மெக்கானிக் (Diesel/Petrol)
டின்கர் (Tinker) | மேசன் (mason)
வெல்டர்(welder) | மெக்கானிக் எல்பர்ஸ் mechanical helpers
இலக்ரீசியன் (Electrician)

கட்டார் நாட்டிலும் வெல்டர் தேவை
(ஒரு மாதத்தில் பயணம்)

விரையுங்கள் இரண்டே வாரத்தில் பயணம்
(தங்குமிடம் மருத்துவம் இலவசம்)

Lanka Voice 24, Station Road, vavuniya.
0750650084

(C-1243)


# இலங்கை...

பிள்ளையிடம் விளக்கமளித்துள்ளனர்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் தற்போதைய நிலைவரங்கள் மீள்குடியேற்றம் தொடர்பான நடவடிக்கைகள் போன்றவை குறித்து அவர்கள் அறிக்கை ஒன்றையும் கையளித்துள்ளனர் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இதற்கிடையில் இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு நவநீதம்பிள்ளையை அரசாங்கம் அழைத்துள்ளது.

எனினும் இது தொடர்பில் அவர் இன்னும் தீர்மானம் மேற்கொள்ளவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-8)


அனைவரும் சுயமாக வேலை செய்வதற்கான வேலைவாய்ப்பு

Part Time | Full Time

உங்களது திறமைக்கு ஏற்ப

மாதம் ஒரு லட்சம்(Rs. 100,000/=)வரை

International Master Card, வேலை விளக்கம், CD, 100% உத்தரவாதம்.

இணையத்தின் மூலம் நவீன தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, வீட்டில் இருந்தவாறே

Data entry, Web Designing, Form filling, Face Book, Animation, Copy Typing, Print, Photoshop, C++, Java, Accounting,... உட்பட 300க்கும் மேற்பட்ட வேலைகள் உள்ளடக்கம்.

ONLINE JOBS

வெற்றியாளர்கள் விபரம் காரியாலயத்தில்

ACS

Kopay Center Kopay

Tel: 077-3967334/ 077-0071835 mail: acskopay@yahoo.com

(கோப்பாய் அரசினர் வைத்தியசாலை சந்தியில் இருந்து 100 m தொலைவில்)

(559)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.10.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org